ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1656/34 - 2010 ජූනි 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.03
1656/34 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண சுகாதார சேவை நியதிச் சட்டம்

**ஊவா மாகாண சபையின் 2010..... ஆம் இலக்கம் கொண்ட சுகாதார சேவை சட்டவியல் பிரதி**

இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகி 10 தினங்களின் பின் ஊவா மாகாண சபைக்கு சமர்ப்பிக்கும்படி அறியத்தரப்படுகிறது. இச்சட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக வேறு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டால் இவ்வறிவித்தலின்படி 10 தினங்களுக்குள் அவ்விடயங்கள் என்னிடம் அறியத்தரப்பட வேண்டும்.

ஏ. எம். புத்ததாச,
சுகாதார, சுதேச வைத்திய,
நன்னடத்தைகள், சிறுவர் விவகார மற்றும்
மகளிர் விவகார அமைச்சர்,
ஊவா மாகாணம்.

சுகாதார, சுதேச வைத்திய சிறுவர் விவகார,
நன்னடத்தைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு,
ஊவா மாகாண மாகாண சபை.
8 மே, 2010.

**ஊவா மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்கம் கொண்ட சுகாதார சேவையின் கொள்கை பிரகடனம்**

***ஊவா மாகாண (பதுளை, மொனராகலை மாவட்டம்) மக்களின் சுகாதார நலன்களை மேம்படுத்துவதற்காகவும், அதை பேணிப் பாதுகாப்பதற்கு தேவையான சேவைகளை முறையாக நடைமுறைபடுத்துவதற்காக ஊவா மாகாண சுகாதார திணைக்களத்தை அமைப்பதற்கான சட்ட திட்டங்களை அமுல்படுத்துவதுடன் அதனோடு தொடர்புடைய ஏனைய சட்ட ஒழுங்கமைப்புகளை கொண்ட கொள்கையாகும்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையினால் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது :

1. இக்கொள்கை பிரகடனம் ஊவா மாகாணத்தின் 2009 ஆம் ஆண்டின் ................ இலக்கம் கொண்ட சுகாதார கொள்கை என அறிமுகப்படுத்துவதோடு அது ஊவா மாகாண சபை ஆளுநரின் அனுமதி பெற்ற திகதியிலிருந்து அல்லது அவரால் குறிப்பிடப்படும் மற்றொரு தினத்திலிருந்து அமுல்படுத்துவதற்கு ஏற்புடையதாகும். *சிறு விளக்கமும் நடைமுறைபடுத்தும் திகதியும்.*

2.1 இக்கொள்கையில் அடங்கிய நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கீழ்க்காணும் மாகாண சுகாதார சட்டத்திட்டங்களுக்கு அமைய (இதன் பிறகு ''திணைக்களம்'' என கூறப்படும்) ஊவா மாகாண சுகாதார சேவை திணைக்களம் அமைக்கப்படும். *மாகாண சுகாதார திணைக்களம் அமைத்தல்.*

*2.2.* இத்திணைக்களத்திற்கு தேவையான உத்தியோகத்தர்களை நியமித்தல் இடமாற்றம் செய்தல் ஒழுக்காற்று நடவடிக்கை என்பன மாகாண ஆளுநர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறொரு அதிகாரியினால் செயல்படுத்தப்படும்.

*மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் செயற்பாடுகள்.*

*3.* சுகாதார விடயப் பொறுப்பான மாகாண அமைச்சரால் செயற்படுத்தப்படும் பொது அல்லது விசேட சந்தர்ப்பங்களில் தேசிய சுகாதார கொள்கைகளுக்கு அமைய ஊவா மாகாணத்தினுள் பின்வருவன நடைமுறைப்படுத் தப்படும் :-

(i) (பயிற்சி வைத்தியசாலை விசேட தேவைக்கான அமைக்கப்பட்ட வைத்தியசாலைகள் தவிர்ந்த) ஊவா மாகாணத்தில் தற்போதுள்ள இனிமேல் அமைக்கப்படவுள்ள மாகாண பொதுவைத்தியசாலைகள் பிராந்திய வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை, ஏனைய பிரிவுகள் கிராமிய வைத்தியசாலை, பிரசவ விடுதி, பிரசவ விடுதியுடன் நடத்தப்படுகின்ற மத்திய மருந்தகம், கிளை மருந்தகம், சுகாதார மத்திய நிலையம், வைத்திய பரிசோதனை நிலையம், விசேட பிரிவு உட்பட அனைத்து வைத்திய நிலையங்களும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்;

(ii) மக்கள் சுகாதார சேவை, பாடசாலை சுகாதார சேவை, முதியோர் சுகாதார சேவை, சுகாதார கல்வி, குடும்ப சுகாதார சேவை, மகளிர் காப்புறுதி, போசனையும் உணவும் உணவு சுகாதார காப்புறுதி சுற்றுப்புற சூழல் சுகாதாரம் போன்ற தேவைகளுக்கான சுகாதார வைத்திய காரியாலயங்கள் உட்பட நோய் நிவாரணம் போன்றவற்றிற்கு தேவையான நிறுவனங்களை அமைப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்தலும் ;

(iii) ஊவா மாகாணத்திற்கான சுகாதார அபிவிருத்தி திட்டங்களை வருடாந்த சுகாதார அமுலாக்க திட்டங்களை தயாரித்து செயல்படுத்தலும், அவசர சந்தர்ப்பத்தில் ஏற்படும் சுகாதார பிரச்சினைகளுக்கு தீர்வினை முன்வைத்து நடைமுறைப்படுத்தல் ;

(iv) ஊவா மாகாணத்தில் மேலுள்ள (i), (ii), ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட ஏனைய அனைத்து வசதிகளையும் வழங்கல் ;

(v) மேற்குறிப்பிட்ட (i), (ii), (iii) ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்கான ஊழியர்களின் தொகையை கட்டம் கட்டமாக தீர்மானித்தலும் அதற்கான அதிகாரிகளின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான செயல்படலும், ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்காக தேவையான உடன்பாடுகளைத் தயாரித்தல் ;

(vi) மேற்குறிப்பிட்ட (i), (ii) என்பவற்றிற்கு கீழ் ஊவா மாகாண சுகாதார நிறுவனங்களில் தற்காலிகமாக சேவையாற்றுபவர்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு முதுமானி கல்விக்கான சந்தர்ப்பங்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் மாகாண சுகாதார திணைக்களத்தின் கடமையாகும்.

*மாகாண சுகாதார பணிப்பாளர்.*

*4.* அரச சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சுகாதார அமைச்சின் செயலாளரின் இணக்கத்துடன் ஊவா ஆளுநரால் சிரேஷ்ட வைத்திய நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் மாகாண சுகாதார பணிப்பாளராக (இதன் பிறகு ''பணிப்பாளர்'' என குறிப்பிடப்பட்டுள்ளது) நியமிக்கப்படவேண்டியதுடன் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் மேற்பார்வையுடனும் வழிகாட்டலின் மூலம் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் செயல்படவேண்டும்.

*உதவி மாகாண சுகாதார பணிப் பாளர், பி. சு. சே. பணிப்பாளர்கள் வைத்திய அதிகாரி கள், பி. ப. சிகிச்சை வைத்திய அதிகாரி கள் பி. மலேரியா வை. அதிகாரிகள் உட்பட ஏனைய அதி காரிளைநியமித்தல்.*

*5.* இக்கொள்கை பிரகடனத்தின் செயற்பாட்டை செய்வதற்கு மாகாண சுகாதார பணிப்பாளரின் உதவிக்காக இதற்குபின்பு தேவைகளுக்கு ஏற்ப பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர், பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், உதவி பிரதேச சேவை சுகாதார பணிப்பாளர்கள், வைத்திய அதிகாரிகள், பிரதேச பல் சிகிச்சை வைத்தியர்கள், பிரதேச மலேரியா வைத்திய அதிகாரிகள் உட்பட ஏனைய அதிகாரிகளை நியமித்துக் கொள்ள முடியும்.

*மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் அதிகாரங்கள் அவரின் கீழ் உள்ள அதிகாரிக்கு ஒப்படைக்கலாம்.*

*6.* இக்கொள்கைப் பிரகடனத்தின் சட்ட விதிகளுக்கும் அதன் ஊடாக கோரப்படும் கட்டளைகளை செயற்படுத்துவதற்காக மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினூடாக இத்திணைக்களத்தின் கீழ் பணிப்புரியும் ஏனைய அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் ஒப்படைப்பதற்கு பணிப்பாளருக்கு உடன்பாடுண்டு.

7. பதுளை, மொனராகலை நிர்வாக மாவட்டங்களுக்காக பிராந்திய சுகாதார சேவை அதிகாரிகள் இருவரை நியமிக்க முடியுமானதோடு அவர்கள் அம்மாவட்டத்தின் சுகாதார சேவையை அமுல்படுத்தி அவற்றை நடைமுறைபடுத்துவது சம்பந்தமாக ஊவா மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு பொறுப்பு கூற வேண்டும். நிர்வாக மாவட்டத் திற்காக மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்களை நியமித்தல்.

8. இக்கொள்கை பிரகடனம் அமுல்படுத்துவதற்கு முன்னதாக ஊவா மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் உரிய பொறுப்புக்களின் அதிகாரிகளும் ஊழியர்களும் மாகாண சுகாதார சேவை திணைக்களத்தில் சேவையாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்ததின் பின் இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் நியமனம் பெற்றவர்களாக கருதப்படும். தற்போதைய சுகா தார சேவையில் உள்ள சேவை யாளர்கள் இப்பிர கடனத்தின் கீழ் நியமிக்கப்பட்டவர் களாக கருதப்படும்.

9.1 இக்கொள்கை பிரகடனத்தின் மூலம் மாகாண சுகாதார திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படும் அதிகாரங்களை செயல்படுத்துவதற்காக தேவையான விடயங்கள் தொடர்பாக சட்டக் கட்டளைகளை மாகாண சுகாதார பணிப்பாளரினால் கட்டளையிடலாம். சட்டத்திட்டங்களை கட்டளையிடல்.

9.2 இப்பந்தியில் கீழ் அறிவிக்கப்படும் அனைத்து சட்ட கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். என்பதுடன் அது பிரசுரமான திகதியிலிருந்தோ அல்லது வேறொரு திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

9.3 அமைச்சரால் அனுமதிக்கப்பட்ட சட்ட திட்டங்களை அடங்கிய வர்த்தமானி அறிவித்தலில் வெளிவந்த பின் 3 மாதத்திற்குள் அனுமதிக்காக மாகாண சபைக்கு சமர்பிக்கப்பட வேண்டும். மாகாண சபையில் அனுமதிக்கப்பட்ட பின் அல்லது அனுமதிக்கப்படவில்லையா என்ற தகவலை வர்த்தமானி மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

10. 1 ஊவா மாகாண சுகாதார அமுலாக்கல் திட்டமும் அவை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக மாகாண சுகாதார அமைச்சிற்கு பொதுவாக ஆலோசனை பெற்றுக்கொடுப்பதற்காக அமைச்சரால் மாகாண சுகாதாரசேவை ஆலோசனை சபை ஒன்று நியமிக்க வேண்டியுள்ளது. மாகாண சுகாதார சேவை ஆலோ சனை சபை.

10.2 ஊவா மாகாண சுகாதார சேவையின் ஆலோசனை சபையின் (இதன் பின் ''ஆலோசனை சபை'' என குறிப்பிடப்படும்) அங்கத்துவ எண்ணிக்கை 15க்கு கூடுதலாக அமையாதவாறு கீழ்க்காணும் நபர்கள் மூலம் அமைதல் வேண்டும்:-

(i) ஊவா மாகாண சுகாதார செயலாளர் ;

(ii) ஊவா மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் ;

(iii) ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ;

(iv) ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ;

(v) ஊவா மாகாண நிர்வாக ஆணையாளர் ;

(vi) ஊவா மாகாண சமூக சேவை பணிப்பாளர் ;

(vii) பதுளை மொனராகலை மாவட்ட பொறுப்பான பிராந்திய சுகாதார பணிப்பாளர் ;

(viii) அரசாங்க சேவையில் அல்லாத அரச வைத்திய சங்கத்தில் பதிவாகிய வைத்தியர் இருவர் (இரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்) ;

(ix) பதுளை மொனராகலை மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுகாதார மற்றும் சுகாதாரசேவை விவகாரத்தின் கீழ் இயங்கிவரும் அரச அல்லாத சுயேட்சை சங்கங்களில் இருவர் ;

(x) சுகாதார சேவையிலுள்ள தொழில் சங்கத்தின் பிரதிநிதிகள் மூவர். (இதில் வைத்திய சேவை தாதி மற்றும் கனிஷ்ட தொழில் பிரிவு ஆகிய சேவைகளாக இருத்தல் அவசியம்.)

10.3 மாகாண சுகாதார செயலாளர், ஆலோசனை சபையின் தலைவராகவும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அதில் செயலாளராகவும் செயற்பட வேண்டும்.

10.4 இங்கு (i) தொடக்கம் (vii) வரை அங்கத்தவர்கள் அதிகார அமைப்பின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதோடு (viii) தொடக்கம் (x) வரையிலான அங்கத்தவர்கள் மாகாண சுகாதார சேவை அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டும். அமைச்சரால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீக்குவதற்கான அதிகாரம் அமைச்சருக்கு உண்டு.

10.5 ஆலோசனை சபையின் செயற்பாட்டு கால எல்லை 3 வருடங்களாகும்.

10.6 ஆலோசனை சபை கூட்டங்கள் சம்பந்தமாக 8 அங்கத்தவர்கள் இருக்க வேண்டும் என்பதோடு குறைந்த பட்சம் 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒன்று கூடல் நடைபெற வேண்டும்.

10.7 அதிகார அமைப்பின் மூலம் நியமிக்கப்படும் அனைத்து அங்கத்தவர்களின் நீடிப்பு காலம் ஆலோசனை சபையின் அங்கத்தவர் ஆவதற்கு அவர் தான் வகிக்கும் பதவியில் இருக்கும்வரை மட்டுமே.

*அங்கத்துவத்திற்கான தகமைகள்.*

10.8 விருப்பத்துடன் பதவி விலகல், மரணம் அல்லது அமைச்சரால் பதவியிலிருந்து விலக்கல் அல்லது முதல் பதவிக்கான வெற்றிடம் ஏற்படும் சந்தரப்பங்கள் தவிர்ந்த நியமிக்கும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அவன் அல்லது அவள் நியமிக்கும் தினத்திலிருந்து மூன்று வருடக்காலத்திற்கு அங்கத்தவராக செயற்பட முடியும் என்பதோடு மீண்டும் தம்மை தெரிவு செய்வதற்கான தகமை உடையவராக செயற்பட வேண்டும்.

10.9 தெரிவு செய்த அங்கத்தவர் மரணம் அடைந்தால், விருப்பத்தின் பேரில் விலகினால் அல்லது பதவியிலிருந்து நீக்கினால் அல்லது வேறுவிதத்தில் பதவி வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சரால் அவ் அங்கத்தவருக்கு பதிலாக வேறொருவரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படும் அங்கத்தவர் முன்னையவரின் எஞ்சிய சேவை காலத்திற்கு மாத்திரம் சேவையாற்றலாம்.

*கொடுப்பனவு வழங்குதல்.*

10.10 ஆலோசனை சபை கூட்டமொன்றிக்கு பங்குபெறும் அங்கத்தவருக்கு அதற்கான கொடுப்பனவு வழங்கப்படுவதோடு அக் கொடுப்பனவு மாகாண ஆளுநரின் உடன்பாட்டிற்கு இணங்க மாகாண சுகாதார அமைச்சரால் தீர்மானம் செய்யப்படும்.

*ஆலோசனை சபையின் கடமை.*

10.11 மாகாண சுகாதார அமைச்சரின் ஆலோசனை சபைக்கு அறிவிக்கும் சில அறிவுறுத்தல்கள் மாகாண சுகாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு உடன்பாடான அது மாகாணத்தின் தேவைகளை இணங்கண்டு சுகாதார மேம்பாட்டிற்கான கருத்துக்களை முன்வைப்பது ஆலோசனை சபையின் கடமையாகும்.

*சுகாதார நிலையங்கள் அமைத்தல், கோட்ட மட்டத்திலான சுகாதார பிராந்திய நிலையங்களை மறுசீரமைத்தல்.*

11. ஊவா மகாணத்தின் மக்கள் பரம்பல், பூமி, நில அளவு, நோய் பரவல், போசாக்குத்தன்மை, சூழல் பிரச்சினை உட்பட போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு நிரந்தர அல்லது தற்காலிகமாக புதியதொரு சுகாதார நிறுவனத்தை ஆரம்பித்தல், கோட்ட மட்டத்திலான சுகாதார நிலையங்களை மறுசீரமைத்தல் ஆகியவை தொடர்பாக மாகாண சுகாதார பணிப்பாளரினால் அமைச்சின் செயலாளருக்கு உறுதிப்படுத்தி அனுமதி பெற்றுக்கொள்டதன்பின் செயற்பட வேண்டும்.

*சுகாதார நிறுவனங்களை பரிசீலித்தல்.*

12. சுகாதார அமைச்சின் செயலாளரோ அல்லது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அவர்களின் முறையாக தகுதி கோரப்பட்ட ஊவா மாகாண சுகாதார அமைச்சு அல்லது மாகாண சுகாதார திணைக்களத்தால் அல்லது ஒரு அதிகாரி மூலம் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு சுகாதார நிறுவனத்திற்கோ மக்களின் சுகாதார நிறுவனத்திற்கோ, மக்களின் சுகாதார நலனுக்காக தேவை எனக்கருதும் எந்தவொரு நிறுவனத்திற்கோ அல்லது அந்த நிறுவனம் அமைந்திருக்கும் இடத்திற்கு உட்பிரவேசித்தல், பரிசோதித்தல், அந்நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டிருக்கும் நபர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அங்கு வரும் நபர்களிடத்தில் விவரத்தை பெறுதலும் தகவல், புகைப்படம் அல்லது அதன் பிரதிகள் பரிசோதித்தல் அந்நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டிருக்கும் நபர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அங்கு வரும் நபர்களிடத்தில் விவரத்தை பெறுதலும் தகவல் புகைப்படம் அல்லது அதன் பிரதிகள் அல்லது ஆவணங்கள் ஆகியவற்றின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்.

*நிலையான நிலையற்ற சொத்துக்களின் உரிமை கோரல்.*

13. தற்போது ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து சுகாதார நிறுவனங்களும் அதை சார்ந்த நிலையான நிலையற்ற சொத்துக்கள் அனைத்தும் ஊவா மாகாண சுகாதார திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாக கருதப்படும்.

*14.1* ஊவா மாகாணத்திலுள்ள நிலஅளவுக்கு ஏதுவாக மக்கள் பரம்பல், நோய் பரவல், போசாக்குத்தன்மை, சூழல் தாக்கம் போக்குவரத்து வசதிகள் உட்பட ஏனைய சுகாதார அளவுகோல்களை அமைவாக கொண்டும் எதிர்வரும் ஒவ்வொரு வருடத்திற்கான மாகாண சுகாதார வேலைத்திட்டம் ஒன்றை ஒவ்வொரு வருடத்திலும் செத்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தனது உறுதிப்பாட்டை அதனுடன் இணைத்து சுகாதார சேவை அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வருடாந்த சுகாதார அபிவிருத்தி செயற்றிட்டம் சம்பந்தமாக ஆலோசனை சபையின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டும். வருடாந்த சுகாதார அபிவிருத்தி செயற்றிட்டம்.

*14.2* ஊவா மாகாணத்தின் அனைத்து சுகாதார நிறுவனங்களின் அபிவிருத்தி திட்டங்களும் புதிய கட்டிட அமைப்பு செயற்றிட்டங்களும் இவ்வேலைத் திட்டத்தில் அடங்க வேண்டும்.

*15.* வருடாந்த செயற்றிட்டம் செயல்படத்தப்பட்ட பின் அதன் வளர்ச்சி தொடர்பான புள்ளி விவரங்களும் அது தொடர்பான தனது முடிவுகளையும் மாகாண சுகாதார நிலை தொடர்பான உறுதிப்பாடுகளையும் அடக்கிய விரிவான வருடாந்த அறிக்கை ஒன்று மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அவர்களினால் முதல் ஆரம்ப காலாண்டுக்கு ஒருமுறை அமைச்சரவைக்கு முன்வைக்கப்படல் வேண்டும். மாகாண சுகாதார நிலை தொடர் பான வருடாந்த அறிக்கை.

*16.* ஊவா மாகாணத்திலுள்ள மாகாணசபை அதிகார பிரதேசத்தின் சுகாதார நிலைமையை இனங்கண்டு அதற்கு தேவையான சுகாதார வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாணப் பணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளதோடு அப்பிரதேசத்தின் சுகாதார நிலை தொடர்பாக புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்கள் தேவைப்படும் பட்சத்தில் அவைகளை சமர்ப்பிக்குமாறு மாகாண செயல்திட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும். அத்தோடு மாகாண செயல்த்திட்ட அதிகாரிகள் அதன் பிரகாரம் செயல்படல் அவசியமாகும். மாகாண நிர்வாக அதிகார பிரதேசத் தின் சுகாதார செயற் பாடு.

*17.* நோயாயர்களுக்கான வசதிகளை வழங்கும் சேவையை நடாத்திச் செல்லும் போது வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் அங்கு சேவை செய்யும் ஊழியர்களுக்கும் சமைத்த உணவு மாகாணப் பணிப்பாளரின் கடமையாகும். அவ்வாறு உணவு வழங்கும் போது பகிரங்க குத்தகை (டெண்டர்) அறிவித்தல் மூலம் பொருத்தமான குத்தகைகாரரை தெரிவு செய்தல் அல்லது பகிரங்க குத்தகை கோட்பாட்டிற்கு அப்பால் குத்தகை பெற்றுக்கொள்ள தகைமை பெற்ற குத்தகை வழிகாட்டல் அமைப்புகள் சம்பந்தமான திணைக்களத்தினூடாக அல்லது சட்டபூர்வமான வைத்திய சங்கங்கள் ஊடாகவோ சமைத்த உணவை தயாரித்துக்கொள்ளவோ கூட்டுறவு சங்கமொன்றின் ஊடாக சமைக்காத உணவுகளை கொள்ளனவு செய்து வைத்தியசாலை ஊழியர்கள் மூலமாகவோ அல்லது வைத்தியசாலை சங்க உறுப்பினர்கள் மூலமோ அவ் உணவை சமைத்தல் போன்று சேவைகளை பெற்று கொடுப்பதற்கு பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சமைத்த உணவு வழங்குதல்.

*17.1* இக்கொள்கையின் கீழ் மாகாணத்துள் மருந்துகளை விநியோகித்தல் (பாமசி பரிசோதனை) மற்றும் பராமரித்தல் போன்றவற்றுக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அல்லது பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட அதிகாரி ஒருவருக்கோ உரிமை உள்ளது.

*17.2* இதன்படி பொதுமக்களில் ஒருவருக்கு ஏதாவது அக்கிரமம் ஏற்படுமிடத்து அதற்கு வழக்கு தாக்கல் செய்ய இக்கொள்கையின் கீழ் உரிமை உள்ளது.

*18.1* ஊவா மாகாணத்தின் சுகாதார சேவை திணைக்களத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மாகாண சபையின் வருடாந்த வரவு செலவு திட்டநிதி ஒதுக்கீடு மூலமோ அல்லது வெளிநாட்டு செயற் திட்டங்கள் மூலமோ தேவையான போது சமர்ப்பிக்கப்படும் பரிபூரண திட்டமிடல்கள் மூலமோ பெற்றுக்கொள்ளல். நிதி ஒதுக்கீடும் கணக்காய்வும்.

*18.2* இத்திணைக்களத்தின் கணக்கு செயற்பாட்டு விவரங்கள் யாவும் கணக்காய்வாளரினாலும் பிரதான செயலக காரியாலய கணக்காய்வு உள்ளகப் பிரிவினாலும் மாகாண அமைச்சின் மூலம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும்.

*19. 1* ஊவா மாகாணத்திலுள்ள (மாகாண சுகாதார அமைச்சிற்குட்பட்ட) பொது வைத்தியசாலை, பிரதான வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவு, கிராமிய வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் புனர் நிர்மாண வேலைத்திட்டங்களுக்காக பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காகவும் அதன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்கள் அடங்கிய (இதன் பின் ''வைத்திய சங்கம்'' எனப்படும்) சங்கம் ஒன்று மாகாண சுகாதார அமைச்சரின்அனுமதியுடன் மாகாண சுகாதார செயலாளரினால் நியமிக்கப்பட வேண்டும். இதில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 25 க்கு உட்பட்டதாக அமைய வேண்டும். வைத்தியசாலை அபிவிருத்தி சங்கம் அமைப்பதும், அதன் கட்டமைப் பும்.

(i) நிறுவனத்தின் பொறுப்பான வைத்திய அதிகாரி ;

(ii) வைத்தியசாலை அமைந்திருக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் அல்லது பிரதிநிதி ஒருவர் ;

(iii) வைத்தியசாலை அமைந்திருக்கும் நிர்வாக பிரதேசத்தில் உள்ள பிரதேச சபைத் தலைவர் அல்லது பிரதிநிதி ஒருவர் ;

(iv) வைத்தியசாலை அமைந்திருக்கும் நிர்வாக பிரதேசத்தின் பொறுப்பான கட்டிட பொறியியலாளர் அல்லது பிரதிநிதி ஒருவர் ;

(v) வைத்தியசாலை அமைந்திருக்கும் பொலிஸ் நிர்வாக பிரிவின் பொலிஸ் தலைமை அதிகாரி ;

(vi) வைத்தியசாலை அமைந்திருக்கும் பிரதேசத்தின் பாடசாலை அதிபர்கள் ;

(vii) வைத்தியசாலை ஊழியர் சபையின் அங்கத்தவர்கள் மூவர் ;

(viii) மதகுருமார் ;

(ix) பிரதேசத்தின் பிரமுகர்கள் இருவர் ;

(x) பிரதேசத்தின் சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள் இருவர் ;

(xi) வைத்தியசாலை அமைந்திருக்கும் பிரதேசத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உறுப்பினர்கள் இருவர் ;

19. 2. நிர்வாகத்திற்கு பொறுப்பான வைத்திய அதிகாரி, பதவிற்கு உள்ள அதிகார பலத்தின் மூலம் சங்கத்தின் தலைவர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதோடு ; ஆரம்ப செயற் கூட்டத்தின் பொழுது பொருத்தமான செயலாளர் ஒருவரை தெரிவு செய்தல் வேண்டும்.

வைத்திய சங்கத் தின் பொறுப்பு.

19.3 (i) மத்திய அரசின், சுகாதார அமைச்சில், தேசிய அளவீடுகளுக்கு அமைய மாகாண அமைச்சினால் கொடுக்கப்படும் சட்ட நிபந்தனைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் உடன்பட்டு சுகாதார நிறுவனத்தின் அபிவிருத்தியும் ஒரு சிறப்பான நிர்வாக செயலை கொண்ட துரிதமான வைத்திய சேவையை மக்களுக்கு பெற்று கொடுப்பது வைத்திய சங்கத்தின் பிரதான பொறுப்பாகும் ;

(ii) வைத்தியசாலை அபிவிருத்தி செயற்பாட்டின் பொழுது கட்டிட அமைப்பு அல்லது மறுசீர்திருத்த வேலைகளோ அல்லது சேவை வழங்குதல் போன்ற வேலைகளை டென்டர் அணுகுமுறைகளுக்கு அப்பால் இச் சங்கத்திற்கு வழங்கும் அதிகாரப் பொறுப்பு செயலாளருக்கு உண்டு. அவ்வாறு செயற்படும் பொழுது மத்திய அரசின் நிபந்தனைகளுக்குட்பட்டு அல்லது இனி கோரப்படும் பணக்கட்டுப்பாடு எல்லைகளுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

19. 4 சங்கத்தின் (செயற்பாட்டு காலம்) 02 வருடங்களாக வேண்டும்.

19.5 தற்போது செயற்பாட்டில் உள்ள வைத்திய சங்கங்கள் இக் கொள்கைப் பிரகடனத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வைத்திய சங்கங்கள் என கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சங்க யாப்பு.

20. சங்க நிர்வாகத்திற்காக பொருத்தமான யாப்பு ஒன்றை அமைச்சரின் கட்டளையிடுவதின் மூலம் சரி செய்து கொடுக்க முடியும்.

பொருள் விளக்கம்.

21. (i) ஆளுநர் என்பது ஊவா மாகாணத்தின் ஆளுநர் எனக்கருதப்படும் ;

(ii) அமைச்சர் என்பது ஊவா மாகாணத்தின் சுகாதார விடயப் பொறுப்பான அமைச்சர் என்பதாகும். மாகாண சபை கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஊவா மாகாண சுகாதார விடயப் பொறுப்பான அமைச்சர் என ஊவா மாகாண கௌரவ ஆளுநர் என்பதாகும்.

(iii) செயலாளர் என்பது ஊவா மாகாணத்தின் சுகாதார அமைச்சின் செயலாளர் என்பதாகும்.

(iv) பணிப்பாளர் என்பது ஊவா மாகாண சுகாதார சேவை திணைக்கள பணிப்பாளராகும் ;

(v) திணைக்களம் என்பது ஊவா மாகாண சுகாதார சேவை திணைக்களமாகும்.

(vi) மாகாணம் என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட யாப்பின் 13 ஆவது சீர்திருத்தத்தின் குறிப்பிடப்பட்டுள்ள ஊவா மாகாண நிர்வாக பிரதேசமாகும்.

(vii) மாகாண சபை என்பது பதுளை, மொனராகலை என்ற இரு மாவட்டங்கள் அடங்கிய ஊவா மாகாணத்திற்காக அமைத்துக்கொண்ட மாகாண சபை எனபதாகும்.

(viii) பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள் என்பது பதுளை, மொனராகலை மாவட்டங்களின் சுகாதார சேவைக்கு பொறுப்பான மாவட்டத் தலைமைப் பொறுப்பாளர்கள் என்பதாகும்.

இக்கொள்கை பிரகடனம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஒரு உடன்பாடு அமையுமாயின் அத்தருணத்தில் சிங்கள மொழி அமைப்பு ஏற்புடையதாக கருதப்படும். சொற்கருத்து.

6- 337/1

---

**ஊவா மாகாண சபையின் 2010..... ஆம் இலக்கம் கொண்ட ஆயுர்வேத மற்றும் வைத்திய சேவை சட்டவியல் பிரதி**

இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகி 10 தினங்களின் பின் ஊவா மாகாண சபைக்கு சமர்ப்பிக்கும்படி அறியத்தரப்படுகிறது. இச்சட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக வேறு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டால் இவ்வறிவித்தலின்படி 10 தினங்களுக்குள் அவ்விடயங்கள் என்னிடம் அறியத்தரப்பட வேண்டும்.

ஏ. எம். புத்ததாச,
சுகாதார, சுதேச வைத்திய,
நன்னடத்தைகள், சிறுவர் விவகார மற்றும்
மகளிர் விவகார அமைச்சர்,
ஊவா மாகாணம்.

சுகாதார, சுதேச வைத்திய, நன்னடத்தைகள், சிறுவர் விவகார
மற்றும் மகளிர் விவகார அமைச்சு,
ஊவா மாகாண மாகாண சபை,
8 மே, 2010.

**ஊவா மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்கம் கொணட ஊவா மாகாண ஆயுர்வேத தேசிய வைத்திய கொள்கை பிரகடனம்**

ஊவா மாகாண மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்காக தேசிய ஆயுர்வேத, சித்த யுனானி போன்ற வைத்திய முறைகளை பாதுகாத்தல், அதன் மேம்பாட்டு விரிவாக்கத்திற்காக ஊவா மாகாண சபை ஆயுர்வேத திணைக்களம் ஒன்று அமைத்தல், அதற்கு உடன்பட்ட சேவையாளர்களை நியமித்தல், ஆயுர்வேத ஆஸ்பத்திரி உட்பட அதற்கிணைந்த ஏனைய ஆயுர்வேத நிறுவனங்களை அமைத்தல், அதன் செயற்பாடுகளை துரிதமாக்குவதும் அதை தொடர்ச்சியாக நடாத்துவதற்கும் ஆஸ்பத்திரிக்கு பயிற்றப்பட்ட முகாமைத்துவ சபை ஆயுர்வேத பாதுகாப்பு என்பதுடன் ஆலோசனை சபை அமைத்தலும் அதை சீராக்கி நடாத்தி செல்லலும் அதற்கு உட்பட்ட ஏனைய விடயங்களை ஈடு செய்து கொள்வதற்கான ஒழுங்கமைப்புகளை மேற்கொள்வதற்காக பிறப்பிக்கப்படும் பிரகடனமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது யாப்பு சீர்திருத்தத்தின் 9 ஆம் உட்பகுதியிலே 12 ஆவது உட்பகுதியிலே மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தொடர்பாக ஊவா மாகாண சபை மூலம் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படும்.

1. இக்கொள்கைப் பிரகடனம் ஊவா மாகாணத்தின் 2009 ஆம் ஆண்டின் .................ஆம் இலக்கம் கொண்ட ஆயுர்வேத தேசிய வைத்திய சேவை கொள்கைப் பிரகடணம் என குறிப்பிடப்படுவதோடு ஊவா மாகாண ஆளுநரால் சிபாரிசு செய்யும் திகதியிலிருந்தோ அல்லது அவரால் சிபாரிசு செய்த வேறு ஒரு தினமொன்றிலிருந்தோ அமுல்படுத்தப்படும். சிறு விளக்கமும் நடைமுறைப்படுத்தும் திகதியும்.

இக்கொள்கைப் பிரகடனம் செயற்படுத்துவதுடன் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதப் பிரகடனம், ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவதற்கு ஏற்றதாகும்.

2. 1 இதனுள் குறிப்பிடப்படுவது எதிர்பார்ப்பையும் நோக்கத்தையும் அடைய (இங்கு திணைக்களம் எனக் குறிப்பிடப்படுவது) ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களமாகும். மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தை அமைத்தல்.

2.2 ஊவா மாகாண சபையினால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு கீழ்க்காணும் நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் அடைய திணைக்களம் செயற்பட வேண்டும், அவையாவன,-

(அ) மக்களின் ஆரோக்கிய மேம்பாட்டிற்காக சுகாதார பாதுகாப்பிற்கும் விருத்திக்கும் நிவாரண வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் அடிப்படை சுகாதார விருத்திக்காக தேவையான நிறுவனங்களை அமைத்தலும் சேவைகளை வழங்கலும் ; எதிர்பார்ப்பும் நோக்கமும்.

(ஆ) பிரதேச செயலகம் வலய மட்டத்தில் ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு அமைப்பை நிறுவ ஏற்ற வசதிகளை செய்து கொடுத்தல் ;

(இ) ஆயுர்வேதத்திற்கு ஏற்ற நோய் பரிசோதனைகளையும் மக்கள் சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளையும் ஊக்குவித்தல் ;

(ஈ) திணைக்களத்தில் சேவையிலுள்ளவர்களுக்கு அல்லது சேவையில் உள்வாங்கப்பட உள்ளவர்களுக்கு புலமைப்பரிசில் உட்பட ஏனைய வசதிகளை வழங்கலும் ஆயுர்வேத சம்பந்தமான பாடநெறிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு நிதியுதவி உட்பட ஏனைய வசதிகளை வழங்குதலும் ஆயுர்வேத கல்வியுடன் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை ஊக்குவித்தலும் ;

(உ) பாரம்பரிய தேசிய வைத்திய முறைகளை பாதுகாத்தல், விருத்தி செய்தல், அதன் தரத்தை உயர்த்துதல்.

(ஊ) ஊவா மாகாணத்திற்கு உரித்தான பாரம்பரிய வைத்திய அறிவு ஓலைச் சுவடுகள், வைத்திய உபகரணங்கள் என்பவற்றை பாதுகாக்க மாகாண ஆயுர்வேத நூதனசாலை அமைத்து அதனை நடாத்திச் செல்ல வசதிகளை செய்து கொடுத்தல் ;

(எ) மாகாணத்திற்குள் மூலிகைத்தோட்டமும் நாற்றுமேடை பராமரிப்பு என்பவற்றை நடாத்திச் செல்ல தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் அதன் கீழ் சுயதொழில்வாய்ப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தூண்டுதல் ;

(ஏ) மாகாணத்திற்கு தேவையான மருந்தை மாகாணத்திற்குள் உற்பத்தி செய்வதற்கு மாகாண மருந்தக உற்பத்தி நிலையத்தை அமைத்தல்.

*மாகாண ஆயுர்வேத ஆணையாளர்.*

3.1. இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அமைய நிறுவப்பட்ட ஆயுர்வேத திணைக்களத்தின் பொறுப்பாளராக கடமைபுரிய மாகாண ஆயுர்வேத ஆணையாளரை நியமிக்க வேண்டும்.

3.2. மாகாண ஆயுர்வேத ஆணையாளர் இலங்கை ஆயுர்வேத சேவையின் வைத்திய அதிகாரியாக இருக்க வேண்டும். அவர் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 32 ஆம் உபபிரிவில் ஊவா மாகாண ஆளுநரால் நிமிக்கப்பட வேண்டும்.

3.3. மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ஊவா மாகாண தேசிய வைத்திய அமைச்சின் செயலாளரின் கட்டளைப்படியும், வழிநடத்தலின் கீழும் செயற்படுத்த வேண்டும்.

*ஏனைய அதிகாரிகளையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

4.1. மாகாண ஆயுர்வேத ஆணையாளர் தனது திணைக்களத்தின் வேலைகளை செய்வதற்காக தனது திணைக்களத்திற்கு தேவைக்கேற்ற சேவையாளர்களை பிரதி மற்றும் உதவி ஆயுர்வேத ஆணையாளர்களையும், ஏனைய அதிகாரிகளையும் ஊவா மாகாண ஆளுநரால் அல்லது ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டும்.

4.2. இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு ஊவா மாகாண ஆளுநர் திணைக்களத்திற்கு உரிய பதவிகளில் கடமையாற்றிய சகல அதிகாரிகள் உட்பட சேவையாளர்கள் மாகாண அரச சேவையின் கீழ் கடமையாற்ற தனது விருப்பத்தை தெரிவித்த பின் இக்கொள்கை பிரகடனத்திற்கு அமைய நியமிக்கப்பட்டவராக கருதப்படும்.

4.3. இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் நியமிக்கப்படும் சகல அதிகாரிகளும் சேவையாளர்களும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் முறையான அரச சேவையாளராக கருதப்படும்.

*ஆயுர்வேத ஆணையாளரின் அதிகாரங்களும், காரியங்களும்.*

5. இக்கொள்கை பிரகடண யாப்பின்படி நிறுவப்பட்ட நிறுவனங்கள் எடுக்கும் இறுதி தீர்மானங்களுக்கு அமைய ஆயுர்வேத ஆணையாளருக்கு கீழ்க் குறிப்பிடப்படும் அதிகாரங்கள் உண்டு :-

(அ) மேலே 2.2 பந்தியில் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் போது ஆணையாளரால் ஆயுர்வேத ஆஸ்பத்திரி, ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை வளம், ஆயுர்வேத நிவாரண மத்திய நிலையம் ஆயுர்வேத களஞ்சிய அறை, மூலிகைத் தோட்டம், நாற்றுமேடை, ஆயுர்வேத நூதனசாலை, ஆயுர்வேத மருத்துவ விற்பனை நிலையம் என்பன மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்தில் தேசிய வைத்திய ஆயுர்வேத பாதுகாப்பு சபையை அமைத்து செயற்படுத்தலும், அதற்கான உதவி ஒத்தாசைகள் வழங்கலும் ;

(ஆ) அக்கொள்கை பிரகடனத்தின் கீழ் நிறுவி ஸ்தாபிக்கப்படுகின்ற நிறுவனம் மூலமாக எடுக்கப்படும் தீர்வு அந்நிறுவனங்களின் இறுதி சிபாரிசின் கீழ் செயற்படலாம் ;

(இ) இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் நிறுவப்படுகின்ற நிறுவனங்களின் தரவுகளும், கணக்கு விவரம் என்பன முறையாகவும் தொடர்ச்சியாகவும் நடைமுறைப்படுத்தல் ;

(ஈ) இக்கொள்கை யாப்பின் கீழ் நிறுவப்பட்ட சகல நிறுவனங்களும் உயர் மட்டத்தில் தரமாகவும் தற்காலத்திற்கு பொருத்தமானதாகவும் செயற்படுகின்றதா என ஆராய்ந்து பார்த்து அது சம்பந்தமான அறிக்கையை அமைச்சருக்கும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கும் உரிய காலத்திற்குள் அனுப்ப வேண்டும்.

(உ) மாகாண ஆயுர்வேத மருந்து நிர்வாக சபை மூலம் பரிபாலிக்கப்படும் ஆயுர்வேத நிறுவனம் இச்சபையின் சிபாரிசின் பேரில் பதிவு செய்தலும் சான்றிதழ் வழங்கலும் ;

*6.* இக்கொள்கை பிரகடனத்தில் எதிர்பார்க்கும் நோக்கங்களை அடைவதற்காக விடய பொறுப்பான அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைச் சபை அமைக்கப்பட வேண்டும். அவ் ஆலோசனைச் சபை அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டும். இச்சபையின் கட்டமைப்பு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும்:- *ஆலோசனைச் சபை அமைத்தல்.*

(அ) உள்நாட்டு வைத்திய விடய பொறுப்பான அமைச்சின் செயலாளர் ;

(ஆ) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ;

(இ) மாகாண உள்நாட்டு வைத்திய விடயப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர் ;

(ஈ) நிறுவாகத் துறையிளோ கல்வித்துறையிவோ ஓய்வு பெற்ற திறைவேற்று அதிகாரி ;

(உ) மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அல்லது அவரின் பிரதி நிதி ஒருவர் ;

(ஊ) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உப வேந்தரால் நியமிக்கப்படும் ஆசிரியர் குழாத்தில் பிரதி நிதி ஒருவர் ;

(எ) பதுளை மற்றும் மொனராகலை மாவட்டத்தினரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆயுர்வேத நிர்வாக சபை அதிகார பகுதிகளில் அங்கத்தினர்களில் இருவர்.

*7.2.2* இன் கோட்பாட்டின் நோக்கங்களை அடையும் போது பாராளுமன்றம் உட்பட மாகாண சபையிலும் அதற்கான இணக்கப்பாட்டிற்குட்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு தொகையை அமைச்சின் பூரண அனுமதியுடன் ஆளுநரால்:- *ஆணையாளரினால் வழங்கப்படும் நிதி உதவி.*

(அ) மாகாண ஆயுர்வேத கல்வி மற்றும் முகாமைத்துவ பயிற்சி சபைக்கு ;

(ஆ) மாகாண ஆயுர்வேத பயிற்சி நிலையத்திற்கு ;

(இ) மாகாண ஆயுர்வேத மூலிகை தரங்கணிப்பாளர் சபைக்கு ;

(ஈ) ஆயுர்வேத வளர்ச்சி அதன் பாதுகாப்பு அதனை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்காக அமைக்கப்பட்ட வேறு நிறுவனங்களுக்கு ;

(உ) ஆயுர்வேத கல்வியை நடைமுறைப்படுத்துவதற்காக பொருத்தமான வேறு நபர்களுக்கு ;

(ஊ) மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபைக்கு

வழங்கப்படும்.

*8.1* ஓரிடத்தில் இயங்கும் ஆயுர்வேத ஆஸ்பத்திரி, ஆயுர்வேத மருந்தகம், ஆயுர்வேத மூலிகை உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை வளம், மூலிகைத் தோட்டம், ஆயுர்வேத மருத்துவ நிலையம், ஆயுர்வேத மருந்தகம், ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் என ஆணையாளரால் பதிவு செய்யப்பட்டு அவ்விடயத்தில் ஆஸ்பத்திரி, மூலிகை உற்பத்தி நிலையம், மூலிகை வளம், மருந்தகம், மருந்து களஞ்சியசாலை, மருந்து விற்பனை நிலையம், ஆயுர்வேத ஊக்குவிற்பு நிலையங்களை கொண்டு நடாத்தும் நபர் அதன் உரிமையாளராக ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்டால் மாத்திரமின்றி அமைச்சரால் அது சம்பந்தமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கு அமைய குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து அதன் பிறகு ஆயுர்வேத ஆஸ்பத்திரி, ஆயுர்வேத மருத்துவமனை, ஆயுர்வேத மூலிகை உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை வளம், ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம், ஆயுர்வேத ஊக்குவிப்பு நிலையங்கள் என்பவற்றிக்காக வேறு எந்த இடத்தையும் உபயோகிக்க முடியாது. *ஆயுர்வேத ஆஸ்பத்திரி, ஆயுர்வேத மருந்தகம், ஆயுர்வேத மூலிகை உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை வளம், மூலிகை தோட்டம் ஆயுர்வேத மருத்துவ நிலையம், ஆயுர்வேத மருந்தக விற்பனை நிலையம் ஆயுர்வேத ஊக்குவிப்பு நிலையம் என்பவற்றை பதிவு செய்தல்.*

*8.2 ஒன்றாம் உப பந்தியில் கீழ் அறிவிக்கப்பட்ட கட்டளைக்கு, குறிப்பிட்ட திணைக்களத்தில் அதற்கிணங்க அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாதத்திற்குள் அடங்கிய நாட்களாக அமையக்கூடாது.*

*8.3 இங்கு 8.1 உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை ஒழுங்கை மீறி ஆயுர்வேத ஆஸ்பத்திரி, ஆயுர்வேத மூலிகை உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை வளம், மூலிகை தோட்டம், ஆயுர்வேத மருத்துவ நிலையம், ஆயுர்வேத மருந்தகம், ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம், ஆயுர்வேத ஊக்குவிப்பு நிலையங்கள் என்பவற்றின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளராக உள்ளவர் இக் கொள்கை பிரகடனத்தின்படி குற்றம் செய்தவராக கருதப்படுவார். அந்நபருக்கு எதிராக இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.*

*அமைச்சர் நிபந்தனைகளை விதிக்கலாம்.*

*9. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் அமைச்சர் நிபந்தனைகளை விதிக்கலாம்:-*

*(அ) ஆயுர்வேத ஆரோக்கிய நிலையம், ஆயுர்வேத நிலையம், ஆயுர்வேத மருந்து உற்பத்தியகம், ஆயுர்வேத மருந்து நிலையம், மூலிகைத்தோட்டம், ஆயுர்வேத மருந்து சேமிப்பகம் அல்லது ஆயுர்வேத மருந்தக விற்பனை நிலையம், ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள் என்பவற்றில் ஏதேனும் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமாயின் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் ;*

*(ஆ) விண்ணப்பப்படிவ அமைப்பும் அதில் அடங்க வேண்டிய விடயங்களும் ;*

*(இ) அப்பதிவு செல்லுபடியாகும் காலஎல்லை மற்றும் குறிப்பிட்ட தொகையை செலுத்தியதன் பின்னரே பதிவை புதுப்பித்தல் சம்பந்தமான சான்றிதழ் வழங்கப்படும் ;*

*(ஈ) பதிவு செய்தல், புதுப்பித்தல் என்பவற்றை செல்லுபடி அற்றதாக்கும் சந்தர்ப்பம் ;*

*(உ) பதிவு செய்தல், புதுப்பித்தல் சம்பந்தமாக விண்ணப்பித்த விண்ணப்பத்தை செல்லுபடியற்றதாக்கியதற்கு எதிராகவோ, பதிவு செய்தலை இரத்து செய்தமைக்கு எதிராக அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் மீள் பரிசீலனை தொடர்பாக அமைச்சரால் எடுக்கப்படும் முடிவுகள் இறுதி முடிவாகும் ;*

*(ஊ) பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத ஆரோக்கிய நிலையம், ஆயுர்வேத நிலையம், ஆயுர்வேத மருந்து உற்பத்தியகம், ஆயுர்வேத மருந்து நிலையம், மூலிகைத்தோட்டம், ஆயுர்வேத மருந்து சேமிப்பகம் அல்லது ஆயுர்வேத மருந்தக விற்பனை நிலையம், ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள் தொடர்பாக அணுக வேண்டிய நிபந்தனைகளும் கட்டளைகளும் ;*

*(எ) அதன் மூலம் நடைமுறைப்படுத்தும் அறிக்கைகள், வங்கி கணக்குகள் புத்தக பதிவுகள் என்பன ;*

*(ஏ) குறிப்பிட்ட நிறுவனம் சம்பந்தமாக முறையாக சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளிலும் அதில் அடங்கிய அல்லது நிவாரணம் பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை, அதில் கடமையாற்றும் சேவையாளர்கள் சம்பந்தமான விவரங்கள் உட்பட்ட அறிக்கையில் அடங்கிய வேண்டிய விவரம்.*

*(ஐ) குறிப்பிட்ட நிறுவனம் மூலம் அறவிடப்படும் கட்டணம் அல்லது அறவிடப்படும் முறை ;*

*(ஒ) அந்நிறுவனத்தில் உட்பிரவேசித்தல், பரிசோதித்தல் சம்பந்தமான அதிகாரம் ;*

*(ஓ) அந்நிறுவனத்தை பதிவு செய்தல் சம்பந்தமாக ஆணையாளரிடம் இருக்க வேண்டியதும், நடைமுறைப்படுத்த வேண்டியதுமான பதிவுகள் ;*

*(ஔ) அவ்வாறான நிறுவனங்களின் நிவாரணம் பெறுபவர்களின் சுகாதார பாதுகாப்பும் அவர்களை முறையான பாராமரிப்பு சம்பந்தமாக சேவைகளும்.*

*சுதந்திர ஆயுர்வேத மருத்துவ சாலை.*

*10. ஊவா மாகாணத்தின், மாகாண நிர்வாக திணைக்களத்தின் கீழ் நடாத்தப்படும் சுதந்திர ஆயுர்வேத மருத்துவ சாலையிலுள்ள நோயாளிகளுக்கு மருத்துவம் செய்வதற்காக தேவையான மூலிகைகளில் ஓரளவு ஊவா மாகாண மூலிகை உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மூலிகைகள் பெற்றுக்கொள்ளப்படும்.*

11.1 2.2. உட்பிரிவில் குறிப்பிட்ட இலக்கை அடைய இக்கொள்கை பிரகடனத்தின் பிரகாரம் பிறப்பிக்கப்படும் நிபந்தனைகளின் ஊடாக கூறப்பட்ட இலக்கை அடைவதற்காக மாகாண ஆயுர்வேத கணக்கு (இதன் பின் ஆயுர்வேத கணக்கு என குறிப்பிடப்படுவது) ஆரம்பிக்கப்பட வேண்டும்.

11.2 கணக்கின் ஆரம்ப ஊக்குவிப்பு பணமாக 500,000 ரூபாய் மாகாண சபை வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்து கணக்கை ஆரம்பிக்க வேண்டும். *மாகாண ஆயுர் வேத கணக்கு.*

11.3. 7 ஆம் உட்பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதிக்கீட்டு தொகையை மாகாண சபை ஊடாக இவ் ஆயுர்வேத கணக்கின் வரவில் நிறைவேற்றிக் கொள்வதற்காக இக்கணக்கின் நிதியை பயன்படுத்தலாம்.

11.4 மேல் 11.2 ஆம் 11.3 ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீட்டுக்களுக்கு புறம்பாக மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு வழங்கப்படும், மூலிகைக்காக செலவாகும் தொகையை ஈடு செய்து கொள்வதற்காக மாகாண நிர்வாக நிறுவனங்களின் வருடாந்த வருமானத்தில் ஒரு தொகையை அந்நிறுவனங்கள் விரும்பினால் இக்கணக்கிற்கு வருடாந்தமாக வரவு செய்து கொள்ளலாம். *நடைமுறையில் உள்ள கணக்கிற்கு காசு கிடைக்கும் வேறு வழிகள்.*

11.5 ஆயுர்வேத திணைக்களத்தின் பெயரில் கிடைக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடை, உதவி என்பவற்றை இக்கணக்கிற்கு வரவாக பதிவு செய்து கொள்ளலாம்.

12.1 கணக்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் யாவும் 5 பேர் அடங்கிய நிர்வாக சபை மூலம் செயற்பட வேண்டும். *கணக்கு நிர்வாக சபையின் கட்ட மைப்பு.*

12.2 இக்கணக்கு நிர்வாக சபையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்கள் இடம்பெற வேண்டும்:-

(i) ஊவா மாகாணத்தின் உள்நாட்டு வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ;

(ii) ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ;

(iii) ஊவா மாகாண பிரதான செயலாளரின் பிரதிநிதி;

(iv) ஊவா மாகாண ஆணையாளர் அல்லது அவரின் பிரதிநிதி ;

(v) விடய பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படும் உள்நாட்டு பாரம்பரிய அல்லது ஆயுர்வேத வைத்திய துறையின் வைத்தியர் ஒருவர்.

13.1 கணக்கீட்டுக்கு கிடைக்கும் அனைத்து நிதியும் முறையாக பதிவு செய்வதோடு கணக்கு வருடாந்தம் கணக்காய்வாளரும், உள்ளக கணக்காய்வு பணிப்பாளரும் பரிசீலிப்பர். *கணக்காய்வு.*

13.2 நிதி சம்பந்தப்பட்ட கணக்கு விவரம் ஒவ்வொரு வருடத்திலும் சமர்ப்பிக்கப்படும்.

14.1 மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ஒவ்வொரு வருட கணக்கு விவரங்களையும், அடுத்து வரும் ஆண்டின் 30 ஆம் திகதிக்கு முன்பதாக கணக்கின், கணக்கு விவர அறிக்கை கணக்காய்வாளருக்கும், உள்ளக கணக்காய்வின் பணிப்பாளருக்கும், அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான செயலாளருக்கும் முன் வைப்பதற்கும் கடமைப்பட்டுள்ளார். *கணக்கு விவரம் தொடர்பாக மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் பொறுப்புக்கள்.*

14.2 கணக்கு பரிசீலனை சபையின் தலைவராக ஊவா மாகாண உள்நாட்டு வைத்திய விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் கடமையாற்றுவதோடு, மாகாண ஆயுர்வேத ஆணையாளர் அதன் செயலாளராக பணி புரிவார். *கணக்கு சம்பந்த மான மாகாண ஆயுர்வேத ஆணை யாளரின் பொறுப் புக்கள்.*

14.3 இக் கணக்கு 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் (iii) ஆவது பிரிவின் 19 ஆம் உட்பிரிவின் சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக அமைய வேண்டும்.

14.4 மாகாண (உள்நாட்டு) தேசிய வைத்திய அமைச்சின் செயலாளரினால் கணக்கிற்கு பொருத்தமான யாப்பு ஒன்றை தயாரித்து அதை விடய பொறுப்பான அமைச்சின் சிபாரிசுடன் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.

மூலிகை தோட்டம் அமைத்தல்.

15.1 அழிவாகி செல்லும் தேசிய மூலிகை கன்றுகளை பாதுகாத்தல் அவைகளை இனங்கண்டு கொள்வதற்கான பெயர் பலகைகள் அமைத்தல், மக்களுக்கு அறிவூட்டல் என்பவற்றை நோக்காக கொண்டு மாகாண ஆயுர்வேத ஆஸ்பத்திரி, மத்திய மருந்தகசாலை உட்பட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அரச நிறுவன அமைப்புக்களின் மூலிகை தோட்டம் அமைப்பதும், மூலிகை நாற்று மேடை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

15.2 மூலிகைத் தோட்டம் அமைப்பதற்காக அரச நிலங்களை பெற்றுகொள்ளும் பொழுது 454 சட்ட அதிகாரத்தின் கீழ் 1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச நில சட்ட ஒழுங்குகளுக்கு அமைய நிலத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

15.3 மூலிகைத் தோட்ட பராமரிப்பு நாற்றுமேடை பராமரிப்பு என்பன மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் இதன் பிறகு பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் பொறுப்பாகும்.

15.4 நாற்று மேடையிலுள்ள மூலிகைக் கன்றுகளை விற்பனை செய்வதற்கு இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் உரிமை உண்டு.

மாகாண ஆயுர் வேத கல்விச் சபை அமைத்தல்.

16.1 இதில் சபை என குறிப்பிடப்படுவதை மாகாண ஆயுர்வேத கல்வி முகாமைத்துவ பயிற்சி சபை என குறிப்பிடப்படும் சபை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

16.2 சபையில் பின்வரும் அங்கத்தவர்கள் இடம்பெற வேண்டும்:-

(அ) ஆயுர்வேத ஆணையாளர் ;

(ஆ) பிரதி ஆயுர்வேத ஆணையாளர் ;

(இ) தியதத்லாவ ஆயுர்வேத வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் மெதகம ஆயுர்வேத வைத்தியசாலையின் பணிப்பாளர் ;

(ஈ) ஏனைய ஆயுர்வேத நிறுவனங்களும், மாகாண நிர்வாக நிறுவனங்களில் அமைச்சருடைய சிபாரிசினால் தெரிவு செய்யப்படும் இரு வைத்தியர்கள் ;

(உ) அமைச்சின் சிபாரிசினால் தெரிவு செய்யப்பட்ட அரச சேவையில் அல்லாத தேசிய பாரம்பரிய அல்லது நிறுவனப் பயிற்சி பெற்ற மூன்று வைத்தியர்கள் ;

(ஊ) இம் மாகாண ஆயுர்வேத கல்வி முகாமைத்துவ பயிற்சி சபையின் செயற்பாடுகளுக்காக பொருத்தமான யாப்பு ஒன்றை தயாரித்து அதை தேசிய வைத்திய விடய பொறுப்பான அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும் ;

(எ) அச்சபையின் செயற்காலம் 3 வருடங்களாகும் என்பதோடு சபையின் எண்ணிக்கை 3/1க்கு குறையாமல் அமைய வேண்டும்.

சபையின் அதிகாரங்கள்.

17. கீழ்க்காணும் அதிகாரங்கள் முகாமைத்துவ சபைக்கு இருக்க வேண்டும்:-

(அ) மாகாண ஆயுர்வேதத்திற்கு உட்பட்ட அரச நிறுவனங்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவைகளை நடைமுறைப்படுத்தல் ;

(ஆ) மாகாணத்தின் பாரம்பரிய தேசிய ஆயுர்வேத வைத்தியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு செயற்படுத்தல் ;

(இ) ஆயுர்வேத பிரிவிற்கு உடன்பட்ட ஏனைய சேவைகள் தொடர்பாக பொருந்தத்தக்க பாடநெறிகளை தீர்மானித்தல், அவைகளை நடைமுறைப்படுத்தல் ;

(ஈ) ஆயுர்வேத கல்வித்துறையில் ஈடுபடும் நபர்களுக்கு அதற்கான புலமைப் பரிசில்கள், மாணவர்கள் உதவிப் பணம், ஏனைய பரிசில்கள், உதவிகள் வழங்குதல் ;

(உ) கல்விப்பிரிவு, பயிற்சி வேலைத்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தலும் முகாமைத்துவமும் ;

(ஊ) பயிற்றப்பட்ட சேவையாளர்களை நியமித்தல் ;

*18. 1* இதன் பின் பரிசோதனை சபை என குறிப்பிடப்படுவது ஊவா மாகாணத்தின் ஆயுர்வேத பரிசோதனை சபை என குறிப்பிடப்படும் நிறுவனம் நிறுவப்பட வேண்டும்.

*மாகாண ஆயுர்வேத பரிசோதனை சபையை அமைத்தல்.*

*18.2* இக்கொள்கை பிரகடனத்தில் *4.1* உட்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதி ஆயுர்வேத ஆணையாளரை அமைச்சரால் பரிசோதனை சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டும்.

*18.3* பரிசோதனை சபையில் கீழ்க்காணும் அங்கத்தவர்கள் இடம்பெற வேண்டும்:-

(அ) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ;

(ஆ) நாவின்ன ஆயுர்வேத பரிசோதனை நிலையத்தின் பணிப்பாளர் அல்லது அவரின் உறுப்பினர் ஒருவர் ;

(இ) மாகாண ஆயுர்வேத ஆணையாளரால் பெயரிடப்படும் ஆயுர்வேத சமூக நலன் சேவைக்கு உள்ளிட்ட அதிகாரி ஒருவர் ;

(ஈ) அமைச்சரின் சிபார்சுகளின் மீது நியமிக்கப்பட்டுள்ள நிபுணத்துவ வைத்தியர்களிலிருந்து ஒருவர் ;

(உ) தியத்தலாவ ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் ;

(ஊ) மெதகம ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி அவர்கள் ;

(எ) மாகாண அல்லது மாகாண நிர்வாக நிறுவனங்களின் கடமை புரியும் இரண்டு வைத்தியர்கள் ;

(ஏ) அமைச்சரின் சிபாரிசில் நியமிக்கப்படும் பாரம்பரிய அல்லது ஆயுர்வேத வைத்தியர்களில் ஒருவர்;

*18.4* பரிசோதனை சபையின் பதவிக்காலம் 3 வருடங்களாகும். சபையின் அங்கத்துவம் 3/1 க்கு குறையாமல் அமைய வேண்டும் ;

*18.5* மேல் குறிப்பிடப்பட்ட ஆயுர்வேத பரிசோதனை சபையின் செயற்பாடுகளுக்கு ஏற்ற யாப்பு ஒன்றை மாகாண ஆயுர்வேத ஆணையாளரினால் உருவாக்கி மாகாண தேசிய வைத்திய அமைச்சருடைய செயலாளரினதும், மாகாண தேசிய வைத்திய விடய பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டின் மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் .

*19.* ஆயுர்வேதத்தின் வளர்ச்சியும் அதன் செயற்பாட்டின் மேம்பாட்டை எதிர்கொள்ளும் வகையிலும், ஆயுர்வேதத்தின் அனைத்து பிரிவினதும் பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசேடமாக கீழ்காணும் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு, மேல் *18.1* உட்பகுதியின் கீழ் இஸ்தாபித்த பரிசோதனை சபைக்கு பொறுப்பாக வழங்கப்படும்.

அதாவது :-

(அ) பரிசோதனை கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்துதல் ;

(ஆ) பாரம்பரிய அறிவை பாதுகாக்கும் வகையிலும் ஆயுர்வேத நூதனசாலை ஒன்றை அமைத்து நடாத்தி செல்லல் ;

(இ) மூலிகை கண்டுகள், மூலிகை பாதுகாப்பு முறைகள் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ளல் ;

(ஈ) நோய், அதற்கு ஏதுவான பரிகார முறைகள் சம்பந்தமான தேவைகளுக்கு ஏற்ப பரிசோதனை மேற்கொள்ளல் ;

(உ) ஆயுர்வேத பரிசோதனைகளும் அதற்கான ஆய்வுகூடங்கள் தொடர்பான முகாமைத்துவம் ;

(ஊ) கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவை தொடர்பாக அதாவது -

(i) ஆயுர்வேத இலக்கியம் ;

(ii) அடிப்படை ஆயுர்வேதக் கல்வி ;

(iii) ஆயுர்வேத விஞ்ஞான வைத்திய முறை ;

(iv) ஜோதிடம், சாந்தி, கிரிகைகள் ஏனைய நோய் பரிகார முறைகள் ;

(v) ஆயுர்வேத முறைக்கு உடன்பட்ட ஏனைய உள்நாட்டு இயற்கை வைத்திய முறைகள் பற்றிய ஆய்வுகள் தொடர்பாக வழிவகுத்தர்.

(எ) ஆயுர்வேத பொருட்களின் குண இயல்புகள் சம்பந்தமாக ஆய்வு நடாத்துதல் ;

(ஏ) தாவர மூலிகை சம்பந்தமாகவும் ஆயுர்வேத சம்பந்தமாக மிருகங்களில் பெறக்கூடிய மூலிகை சம்பந்தமாகவும் ஆய்வு நடாத்துதல் ;

(ஒ) ஆயுர்வேத வைத்திய சபை மூலம் அவ்வப்பொழுது மேற்கொள்ளும் ஆய்வுகள் சம்பந்தமாக ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தல், ஆய்வு சம்பந்தமான கொள்கைகளை முன்வைத்தல் என்பன பரிசோதனை சபையின் பொறுப்பாகும்.

(ஓ) ஆயுர்வேத சம்பந்தமாக மூலிகை தாவரங்களுக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் உள்ள தாவரங்கள் பற்றிய கவனத்தில் கொள்ளுதலும் அவைகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான முறைகளை மேற்கொள்ளல் ;

*சபையின் அதிகாரங்கள்.*

20. கீழ்க்கூறப்படும் அதிகாரங்கள் பரிசோதனை சபைக்கு இருக்க வேண்டும் :-

(அ) ஆய்வு கூடங்கள், பரிசோதனை செயற்பாடுகள் ஆய்வாளர்கள் தொடர்பாக சட்ட அதிகாரங்கள் என்பவற்றிக்கு அனுமதி அளித்தல் ;

(ஆ) ஒவ்வொரு வருடத்திற்கும் முன்வைக்கப்படும் ஆய்வு வேலைத் திட்டங்கள் தயாரித்து மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகளின் பெறுபேறுகளையும் தகவல்களையும் தொடர்ச்சியாக கொண்டு நடாத்தல் ;

(இ) இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் அமைக்கப்படும் ஆயுர்வேத பரிசோதனை சபைக்காக நிர்வாக இணை சபையை அமைப்பதும் அதற்கான யாப்பை பிறப்பித்தலும் ;

(ஈ) ஆயுர்வேதத்திற்கு தேவையான பரிசோதனை சபை தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் தேசிய, பாரம்பரிய வேறு பொறுத்தமானது என ஆய்வு சபை கருதிய தருணத்தில் காலத்திற்கேற்ப சம்பந்தப்பட்ட துறையில் உதவிகளை பெற்றுக்கொள்ளல் ;

(உ) நிறுவனங்களில் உள்ள தனி குழுக்களின் உதவியை பெறல் ;

(ஊ) ஆயுர்வேத திணைக்களத்தின் மூலமாக செயற்படுத்தப்படும் ஏதேனும் ஒரு ஆய்வின் பெறுபேறுகளை ஆயுர்வேத திணைக்களத்திற்கு புறம்பாக இயங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நபர் ஒருவரோ அல்லது குழுக்களோ, அல்லது நிறுவனங்களோ (உரிமைகோருமானால்) அனுபவிக்குமானால் அதற்காக பணமாகவோ அல்லது வேறு சமனான பிரதி பலன்களை பெற்றுக்கொள்வதற்கு உரிமையுண்டு என்பதோடு அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் உரிமையும் உண்டு ;

(எ) மேல் குறிப்பிட்ட செயல்களை செயற்படுத்துவதற்காக அவ்வப்பொழுது தெரிவு செய்து கொள்ள செயற்குழு அமைக்க வேண்டும் ;

*மாகாண ஆயுர்வேத கூட்டல் தொகுப்பு சபை.*

21.1 இதன் பின் தொகுப்பு சபை என அறிமுகப்படுத்தும் ஆயுர்வேத மூலிகை தொகுப்பு சபை மாகாண ஆயுர்வேத தொகுதிப்பு சபை மாகாண ஆயுர்வேத தொகுப்பு சபை அமைக்கப்பட வேண்டும் ;

21.2 இக்கொள்கை பிரகடனத்தின் 4.1 உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதி அல்லது உதவி ஆயுர்வேத ஆணையாளர்களின் ஒருவரை அமைச்சினால் மூலிகை தொகுப்பு சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டும் ;

21.3 மூலிகை ஆலோசனை சபையின் கீழ் குறிப்பிடப்பட்டோர் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் சிபாரிசின்படி மாகாண அமைச்சின் செயலாளரின் அனுமதியின் ஊடாக செயல்படுத்தல் ஊவா மாகாணத்தில் உள்ள இயற்கை மூலிகைகளை மாகாணத்திற்கு வெளியில் கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதலும் அதற்கான சிபாரிக்களும் கட்டணங்களையும் தீர்மானித்தல்:-

(அ) மாகாண மூலிகை உற்பத்தி நிலையத்தின் பிரதான வைத்திய அதிகாரி ;

(ஆ) மாகாண மூலிகை உற்பத்தி நிலையத்தின் பிரதான வைத்திய அதிகாரி ;

(இ) மாகாண ஆயுர்வேத கல்வி காரியாலங்களின் உத்தியோகத்தர்களில் அமைச்சரின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்படும் ஒரு வைத்திய அதிகாரி ;

(ஈ) மாகாணத்தின் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி செய்யும் அதிகாரிகளில் ஒருவரை அமைச்சரின் அங்கீகாரத்துடன் நியமித்தல்.

22. மாகாண ஆயுர்வேத மருந்துகள் சபைக்கு கீழ்வரும் உரிமைகள் காணப்படும் :-

(அ) மாகாணத்துள் ஆயுர்வேத கொள்கை பிரகடனம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல் ;

(ஆ)மாகாணத்துள் மருந்துகளை விநியோகித்தல் மற்றும் அதன் பாவனைகளை வரையறை செய்தல் ;

(இ) மாகாணத்துள் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி மேற்பார்வையை வரையறை செய்தல் மற்றும் சட்டங்களை அறிமுகப்படுத்தல் ;

(ஈ) மருந்துகளின் பௌதிக தன்மையை பாதுகாத்தல் மற்றும் சான்றுப்படுத்தல் ;

(உ) அனைத்து ஆயுர்வேத மருந்துவகைகளும் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத கொள்கை பிரகடனம் மற்றும் அது சம்பந்தமான அநுபந்த கொள்கை மற்றும் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் சங்கத்தின் சட்ட விதிமுறைகளின் கீழ் உற்பத்தி செய்வதாக வகைக்கூறல் ;

(ஊ)அரச அல்லாத ஏனைய நடைமுறை சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் சம்பந்தமாக சட்டப்படி செயற்படல். அது சம்பந்தமாக ஆயுர்வேத ஆணையாளரிடம் அனுமதி பெற்றுக்கொடுத்தல் ;

(எ) மாகாணத்துள் ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி நிலையங்களை ஸ்தாபித்தல், பதிவுக்கான கட்டணங்களை அறவிடல், மருந்து கலவையாளர்களை பயிற்றுவித்தல், நியமித்தல் மற்றும் பதிவுகளை இரத்துச் செய்தல் ;

(ஏ) ஆயுர்வேத மருந்துகள் சம்பந்தமாக மருந்தகங்களை நடாத்திச் செல்வது தொடர்பாக ஏனைய சட்டபூர்வமான நிதி ஒதுக்கீடுகளை அறிந்துகொள்ளல், அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் ;

(ஐ) மருந்தாக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகைகள், பதப்படுத்தப்பட்ட பதப்படுத்தப்படாத மூலிகைகள் ஏற்றுமதி செய்தலும், ஊவா மாகாணத்திற்கே உரித்தான ஆயுர்வேத தாவர தொடர்பாக பேட்டன் உரிமை பத்திரத்தை பெறல் என்பவற்றிக்கு மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் சிபாரிசின்படி மாகாண அமைச்சின் செயலாளரின் அனுமதியின் ஊடாக செயற்படுத்தல் ;

(ஒ) ஊவா மாகாணத்திலுள்ள இயற்கை மூலிகைகளை மாகாணத்திற்கு வெளியில் கொண்டு செல்வதற்கு அனுமதி பத்திரம் வழங்கலும் அதற்கான சிபாரிசுகளையும் கட்டணங்களையும் தீர்மானித்தல் ;

அனைத்து சபைகளுக்குமானபொது விடயங்கள்.

23.1 சகல சபைகளின் பதவிக்காலம் மூன்று லிப் வருடங்களாகும்.

23.2 அமைச்சரின் விருப்பத்திற்கமைய சபையின் பதவிக்காலத்தை வர்த்தமானி அறிவித்தல் ஒன்றில் அறிவித்த பின் இரத்துச் செய்யலாம்.

23.3 சபை கூடலில் முழு அங்கத்தவரின் எண்ணிக்கை 3/1ற்கு குறையாது இருத்தல வேண்டும்.

23.4 சகல சபை கூட்டங்களும் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது நடாத்த வேண்டும்.

23.5 ஓர் ஒன்று கூடலுக்கு அங்கத்தவர்களுக்கு அமைச்சரால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படும்.

23.6 தொடர்ச்சியாக மூன்று முறை கூட்டத்திற்கு வராத அங்கத்தவரின் அங்கத்துவம் இரத்துச் செய்வதற்கு வழிவகுக்கும்.

ஆயுர்வேத ஆஸ்பத்திரி சங்கம் அமைத்தல்.

24.1 ஆயுர்வேத ஆஸ்பத்திரியும் ஆயுர்வேத மத்திய மருந்தகசாலை மூலம் தரமான சேவையை பெற்றுக்கொடுத்தலும் அந்நிலையங்களை அபிவிருத்தி செய்தலும் அதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தலும் ஆலோசனை வழங்குவதற்காக மக்கள் மத்தியில் கிட்டிய உறவுகளை ஏற்படுத்தலும் இலக்கிய நோக்கு கொண்ட சகல ஆயுர்வேத ஆஸ்பத்திரியும் மத்திய மருந்த சூழலில் ஆஸ்பத்திரி அபிவிருத்தி குழு அமைக்க வேண்டும்.

24.2 அவ்வாறான ஆயுர்வேத ஆஸ்பத்திரி சங்கத்தில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் அடங்க வேண்டும்:-

(அ) சங்கத்தின் தலைவராக நிர்வன பொறுப்பாளராக வைத்தியர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதோடு ஆயுர்வேத ஆணையாளர் மாகாண நிறுவனங்களின் பொறுப்பாளரும் பிரதேச செயலாளர் ஆலோசகராக இச்சங்கத்தில் அதிகாரபூர்வமாக நியமிக்கப்படும் இக் கமிட்டிக்கு மாகாண தேசிய வைத்திய கௌரவ அமைச்சரின் இணக்கப்பாட்டோடு கிடைக்க பெற வேண்டும் ;

(ஆ) சங்க ஒருங்கிணைப்பாளர் சங்க செயலாளராக இருக்க வேண்டும் ;

(இ) சங்க உறுப்பினர்களால் செயலாளரை நியமிக்கப்பட வேண்டும் ;

24.3 கீழ்க் குறிப்பிடும் நபர்கள் சங்க உறுப்பினராக அமைக்கப்பட வேண்டும் .

(அ) பிரதேச மத பீடாதிபதி சங்க தலைவர் அல்லது மதபீட பொறுப்பான செயலாளர் ;

(ஆ) சமாதான சபை தலைவர் ;

(இ) பிரதேச கல்வி துறையின் உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) பிரதேசத்தில் பதிவான சட்டத்தரணி அல்லது சமாதான நீதவான் ;

(உ) ஆயுர்வேத பாராமரிப்பு சபையின் தலைவர் அல்லது செயலாளர் ;

(ஊ) கலாசார அதிகாரி, சமூக சேவை அதிகாரி, சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரி, விவசாய உற்பத்தி ஆராய்ச்சி உதவி அதிகாரி, விவசாய ஆலோசகர், கமநல சேவை அபிவிருத்தி அதிகாரி ;

(எ) பிரதேச சமய தலைவர் ;

(ஏ) பிரதேச கிராம சேவகர் ;

(ஐ) பிரதேசத்தின் பதிவாகியுள்ள பிரமுகர் ;

(ஒ) பிரதேச ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி.

சங்கத்தின் பொறுப்புகளும் செயற்பாடுகளும்.

25. 1 ஆஸ்பத்திரி சங்கத்திற்கு ஆஸ்பத்திரி அபிவிருத்தி நிதியம் ஒன்றை ஆரம்பிக்கும் பட்சத்தில் முறையான கணக்கு பதிவுகள் இருக்க வேண்டும்.

25.2 இந்த நிதியம் வருடாந்தம் கணக்காய்வாளராலும், உள்ளக கணக்கு ஆணையாளர் மூலமும் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

25.3 நிதியத்தின் நிதி ஆண்டு கலண்டர் ஆண்டு ஆகும்.

25.4 மேற்குறிப்பிட்ட ஆஸ்பத்திரி சங்க செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக ஏற்ற யாப்பை தயாரித்து தேசிய விடய வைத்திய பொறுப்பு அமைச்சின் உடன்பாட்டுடன் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.

25.5 நிதியத்தின் ரூபா 10,000 தொடக்கம் 50,000 வரையான செலவிற்கு மாகாண ஆணையாளரின் அனுமதியுடனும் அதற்கு மேல் செலவு செய்யும் தொகைக்கு விடய பொறுப்பு அமைச்சின் செயலளரின் அனுமதியினை பெற வேண்டும்.

25.6 அனைத்து அங்கத்தவர்களின் சேவைக்காலம் மூன்று வருடங்களாகும்.

25.7 ஆஸ்பத்திரி சங்க உறுப்பினர்களை விலக்குதல், நியமித்தல் சங்கத்தை கலைத்தல் என்பவற்றின் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு.

25.8 சங்கத்தின் எந்தவொரு உறுப்பினரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடிதம் மூலமாக அமைச்சருக்கு தெரிவிப்பதன் மூலம் சங்கத்தில் இருந்து விலக முடியும். அவ் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும் அமைச்சின் விருப்பத்தை பொறுத்ததாகும்.

25.9 சங்க கூட்டத்திற்கு 3/1 உறுப்பினர்களுக்கு குறையாது இருக்க வேண்டும்.

25.10 சங்க கூட்டத்திற்கு தலைவர் தலைமை வகிக்க வேண்டும். அவர் இல்லாதவிடத்து உறுப்பினர்களின் ஏகாபிமான தெரிவாக ஒருவரை தெரிவு செய்து கூட்டத்தை நடாத்த புதிய தலைவருக்கு அதிகாரம் உண்டு. இக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஏற்புடையதாக அமையும்.

25.11 குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட்டம் கூட வேண்டும். இக்கூட்டத்தின் அறிக்கை செயலாளரால் மாகாண ஆயுர்வேத ஆணையாளரிற்கு அனுப்ப வேண்டும்.

25.12 சங்க உறுப்பினர் அவரது உறுப்பினர், குடும்ப உறுப்பினர் எவருக்கும் மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைக்கு எந்தவொரு வழங்களோ கொள்வனவோ குத்தகை ஒப்பந்தங்களுக்கு உள்வாங்கப்படக்கூடாது.

25.13, 25.12 உப பிரிவில் குறிப்பிட்டபடி ஏதேனும் இடம்பெற்று தெரியவந்தால் விசாரணையின் பின் சங்க உறுப்பினரை நீக்குவதற்குமான நிபந்தனையை சங்க செயலாளர் அனுப்பி வைக்க வேண்டும்.

25.14 தத்தமது கடமைகளை செய்யும் பொருட்டு நிர்வாக பொறுப்பாளரினால் எழுத்து மூலம் வழங்கப்பட்ட நேரத்தை தவிர சங்க உறுப்பினர்கள் சுயமாக நிறுவனத்துள் நுழைவது பரீட்சிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

26. கருத்துத் தெரிவு.

* ''ஊவா மாகாணம்'' என்பது பதுளை, மொனராகலை மாவட்டங்களிலுள்ள நிர்வாக பகுதிகளாகும்.
* ''ஆளுநர்'' என்பது ஊவா மாகாண சபை ஆளுநராகும்.
* ''அமைச்சு'' என்பது ஊவா மாகாண சபை அமைச்சர்களாகும்.
* ''அமைச்சர்'' என்வர் ஊவா மாகாண தேசிய வைத்திய விடய பொறுப்பமைச்சராவார். மாகாண சபை கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஊவா மாகாண சுகாதார விடய பொறுப்பமைச்சர் ஊவா மாகாண கௌரவ ஆளுநர் என்பது கருத்தாகும்.
* ''பிரதான செயலாளர்'' என்பது ஊவா மாகாண சபையின் செயலாளராகும்.
* ''செயலாளர்'' என்பது ஊவா மாகாண சபை தேசிய வைத்திய விடய பொறுப்பமைச்சரின் செயலாளராகும்.
* ''ஆணையாளர்'' என்பது ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளராகும்.
* ''மாகாண நிர்வாக நிறுவனம்'' எனப்படுவது மாநகர சபை, நகரசபை பிரதேச சபை.

''ஆயுர்வேதம்'' என்பது ஆயுர்வேதம் சித்த, யுனானி போன்ற உள்நாட்டு சிகிச்சை முறையிலுள்ள வைத்தியமுறைமைகளும், சத்திர சிகிச்சை முறைமைகளும், பஞ்சதந்திர சிகிச்சை முறைமைகளும், ஸ்பா (Spa) சிகிச்சை முறைமைகளும், அந்தந்த நாடுகளிலுள்ள உள்நாட்டு வைத்திய முறையும், அந்த நாட்டில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வைத்தியமுறைகளும் உள்வாங்கப்படுவதோடு தாவர மூலிகை மூலம் இயற்கையாக உள்நாட்டில் அதற்கேற்ற சமாந்தர முன்னைய பாரம்பரிய முழுமையானதும், அதற்கு பொருத்தமான கருத்தை தரும் இலங்கை செயற்பாட்டிலுள்ள நிவாரணமுறையோ, முறைகளோ நோய் நிவாரணமோ, சுகாதார மேம்பாட்டு முறையோ, முறைகளோ அடங்கும்.

''தேசிய வைத்திய பாரம்பரிய வைத்தியம் '' என்பது இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத ஊவா மாகாணத்தில் நிரந்தர பதிவாளராக பதிவை பெற்றுள்ள வைத்தியர்கள்.

இதனோடு இணைந்த ஏனைய சேவைகள் சோதிடர் ஏனைய யாக முறைகள் சம்பந்தப்பட்ட கடமையில் ஈடுபடுவர்.

மூலிகை தோட்டம் என்பது பாரம்பரிய அல்லது ஆயுர்வேத வைத்திய விஞ்ஞானத்திற்காக பாவனையிலுள்ள மரம், செடி, புல்பூண்டு என்பன அடங்கும்.

27. இக்கொள்கை பிரகடனம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு இடையே ஒரு உடன்பாடு அமையுமாயின் அத்தருணத்தில் சிங்கள மொழி அமைப்பு ஏற்புடையதாக கருதப்படும். சொற்பிரயோகம்.

**ஊவா மாகாண சபையின் 2010..... ஆம் இலக்கம் கொண்ட அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதைசிறுவர் இல்ல சட்டவியல் பிரதி**

இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகி 10 தினங்களின் பின் ஊவா மாகாண சபைக்கு சமர்ப்பிக்கும்படி அறியத்தரப்படுகிறது. இச்சட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக வேறு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டால் இவ்வறிவித்தலின்படி 10 தினங்களுக்குள் அவ்விடயங்கள் என்னிடம் அறியத்தரப்பட வேண்டும்.

ஏ. எம். புத்ததாச,
சுகாதார, சுதேச வைத்திய,
நன்னடத்தைகள், சிறுவர் விவகார மற்றும்
மகளிர் விவகார அமைச்சர்.
ஊவா மாகாணம்.

சுகாதார, உள்நாட்டு மருத்துவத்துறை, சிறுவர் விவகார,
நன்னடத்தைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு,
ஊவா மாகாண மாகாண சபை,
8 மே, 2010.

**ஊவா மகாண சபை**

2010 .......... ஆம் இலக்கம் கொண்ட அநாதை, கைவிடப்பட்ட, உதவியற்ற சிறுவர் நிலைய கொள்கை பிரகடனம்

ஊவா மாகாணத்தில் வாழும், அநாதை, கைவிடப்பட்ட, உதவியற்ற பிள்ளைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு என்பவற்றை ஏற்படுத்துவதற்காக நிறுவனங்களை பதிவு செய்தலும் அவற்றின் மேற்பார்வை, நிர்வாக ஒழுங்கமைப்பதற்கான ஒழுங்குகள் அமைப்பதும் அதன் தொடர்பான அல்லது அதற்கு உடன்பட்ட வேறு காரணங்களுக்கு ஏற்ப ஒழுங்குகள் அமைப்பதற்காக இக்கொள்கை பிரகடனம் 142 ஆம் அதிகாரம் கொண்ட அநாதை சிறுவர் பராமரிப்பு இல்லக் கொள்கை பிரகடனத்திற்கு ஏற்புடையதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையின் மூலம் இவ்வாறு அமுல்படுத்தப்படும்.

*கருத்து தெளிவு.*

மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளரின் கீழ் ஊவா மாகாண மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் குறிப்பிடப்படுவார்.

*சிறு விளக்கமும் செயற்படும் திகதியும்.*

1. இக்கொள்கை பிரகடனம் ஊவா மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்கம் கொண்ட அநாதை, கைவிடப்பட்ட மற்றும் உதவியற்ற சிறுவர் நிலைய கொள்கை பிரகடனம் என குறிப்பிடப்படுவதோடு ஊவா மாகாண ஆளுநரின் அனுமதி கிடைக்கும் திகதியில் இருந்து அல்லது அவர் நியமிக்கும் திகதியின் மறுதினமொன்றில் இருந்து இது நடைமுறையாகும்.

*சிறுவர் இல்லமொன்று அமைத்தல்.*

2. இதற்கு பின்பு (சிறுவர் இல்லம் என கருதப்படுவது) தொடங்கும் 5 வருடத்திலிருந்து 18 வயது வரையிலான அநாதை, கைவிடப்பட்ட மற்றும் உதவியற்ற சிறுவர்களுக்காக, விடுதிகளின் ஊடாக பாதுகாப்பு அளிக்கப்படும். அநாதை, கைவிடப்பட்ட மற்றும் உதவியற்ற சிறுவர் நிலையமொன்றின் முகாமையாளரால் அவ்விடுதியில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் ஒன்றை மாகாண நன்னடத்தை ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

*பதிவு செய்வதற்கான தேவைப் பாடுகள்.*

3. இப்பிரகடனத்தின் கீழ் ஊவாமாகணத்தில் செயல்படும் சகல சிறவர் இலங்களையும் பதிவு செய்தல் வேண்டும். பதிவுக்காக விண்ணப்பிக்கும் சகல சிறுவர் இல்லங்களும் கீழ் வரும் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும் :-

- சிறுவர் இல்லமொன்று நடாத்திச் செல்வதற்கான வேலைத்திட்டங்களை தொண்டர் அமைப்பொன்றின் மூலமாக செயற்படுத்த வேணடும்.
- (இதன் பின் "சபை" என குறிப்பிடப்படும்) தலைவர், உப தலைவர், செயலாளர், பொருலாளர் மற்றும் முகாமையாளர் அடங்கிய ஒரு முகாமைத்துவ குழுவாக நடைபெற வேண்டும்.
- சபை அங்கத்தவர்களில் மூவர் சிறுவர் இல்லம் அமைந்திருக்கும் பிரதேச செயலகப் பிரிவின் நிரந்தர வதிவாளராக இருக்க வேண்டும்.
- காலத்திற்குக் காலம் மாகாண நன்னடத்தை ஆணையாளரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அமைய இல்லங்கள் செயற்பட வேண்டும்.

4. ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளருக்கு விண்ணப்பம் கிடைத்த உடனோ அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடாத்தப்படுகின்றது என்ற முறைப்பாடு கிடைக்கும் பட்சத்திலோ எந்தவொரு ஊவா மாகாண நன்னடத்தை அதிகாரி ஒருவருக்கோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு அதிகாரிக்கோ பின்வரும் விடயங்கள் தொடர்பாக 4 கிழமைகளுக்குள் அறிக்கை ஒன்று பெற்றுத்தருமாறு ஆணையிடலாம்:- தகவல் பெற்றுக் கொள்ளல்.

(அ) அச் சிறுவர் இல்லத்தின் விடுதிகளில் தங்கியிருக்கும் குழந்தைகளின் உயர்தர பாதுகாப்பு அவ்வில்லங்களின் ஊடாகவே நடாத்தப்படுகின்றமை ;

(ஆ) மூன்றாம் பிரிவின் படி ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளரால் நியமம் செய்யப்பட்ட நியமங்களுக்கு அமைய செயற்படுகின்றமை.

5.4 ஆவது பிரிவிற்கமைய அறிக்கை கிடைத்த பின் விடுதியிலுள்ள சிறுவர்களின் சுப நலன்கள் அவ் இல்லத்தின் மூலமாகவே நடாத்தப்படுவதோடு அது எதிர்பார்க்கும் தரத்தோடு செயற்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு நிறுவனங்களுக்குள் பிரவேசிக்கும் ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளருக்கோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிக்கோ எச்சந்தர்ப்பத்திலும் பலம் உண்டு. தனியாள் பரிசீலனை.

6. 5 ஆம் உப பிரிவிற்கமைய பரிசீலிக்கப்பட்ட பின் ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளர் திருப்தி அடைவாராயின்:- பதிவு செய்தல்.

(அ) அக்கொள்கை பிரகடனம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் இல்லமாயின் 5 மாத கால இடைவெளிக்குள்ளோ ;

(ஆ) இக்கொள்கைப் பிரகடனம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிக்கு பின் பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமாயின், 6 மாத காலத்துக்குள்ளோ ;

(இ) தற்போதைக்கு பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களாயின் அவை இக்கொள்கைப் பிரகடனத்திற்கு அனுமதி கிடைத்து 6 மாத கால உட்பகுதிக்குள்ளும்,

சிறுவர் இல்லங்கள் பதிவு செய்வதற்காக ஊவா மாகாண நன்னடத்தை ஆளுநர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

7.1 ஊவா மாகாண நன்னடத்தை ஆளுநரால் எதிர்பார்க்கப்படும் தரத்தின் 10 வீதமாவது சபையின் மூலம் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். தாவரங்களுக்கு ஏற்ப செயற்படு வதற்கான செய்தல்.

7.2 எஞ்சியுள்ள தர அளவுகளை சிறுவர் இல்லம் பதிவு செய்து 3 வருடத்திற்குள் அடைவதற்கான ஒப்புதலை சிறுவர் இல்ல முகாமையாளர், ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

8.1 சிறுவர் இல்லம் பதிவு செய்வதற்கான மாதிரிப்படிவத்தை ஊவா மாகாண நன்னடத்தை ஆணயையாளரால் அவ் சிறுவர் இல்லப் பொறுப்பான முகாமையாளருக்கு வழங்குதல் வேண்டும். சான்றுதல் வழங்குதல்.

8.2 தான் பதிவு செய்த அனைத்து சிறுவர் இலங்கள் தொடர்பாக அச் சிறுவர் இல்லத்தின் பெயர், முகவரி பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும், தொண்டர் நிறுவனமாயின் அதன் பெயருடன் ஆணையாளருக்கு தேவையெனக்கருதும் ஏனைய விபரங்கள் இருப்பின் அவை தொடர்பான கோவை ஒன்று ஊவா மாகாண நன்னடத்தை ஆளுநரால் நடைமுறைப்படுத்திச் செல்லப்பட வேண்டும்.

9. சிறுவர் இல்லம் தேவையான தரத்திற்கு ஏற்ப நடாத்திச் செல்வதற்கு தவறியுள்ளது என்பதும் அச் சிறுவர் இல்லத்தின் மூன்றாம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் இல்லை என ஆய்வின் பொழுது உறுதி செய்யப்பட்டால் அச் சிறுவர் இல்லம் பதிவு செய்யமுடியாது என்பதை ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளர் இல்ல முகாமையாளருக்கு அறிவிக்க வேண்டும் (தொண்டர் சிறுவர் இல்லங்களின் சேவைகளின் தரத்தை மேம்பாடு செய்வதற்காக பொதுவான ஓர் தர அளவு முறை இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது). பதிவை ரத்துச் செய்வது தொடர் பான அறிவித்தல்.

10. ஊவா மாகாண நன்னடத்தை ஆளுநரால் பதிவு இரத்துச் செய்யப்பட்டது தொடர்பான அறிவித்தலின் பின் சிறுவர் இல்ல முகாமையாளரால் அவ்வறிவித்தல் தினத்திலிருந்து 30 நாட்களுக்கு உட்பட்ட கால எல்லைக்குள் ஊவா மாகாண நன்னடத்தை விடயப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு மீள் பரீசீலனை மனு (கடிதம்) ஒன்று சமர்ப்பிக்க முடியும். மீள் பரிசீலனை தொடர்பாக செயலாளருக்கு அறிவித்தல்.

மீள் பரிசீலனை தொடர்பாக தீர்வு.

11.1 செயலாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட இருவர் அடங்கிய சபை மூலம் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

11.2 (1) முதலாம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சபையில் அடங்கிய இருவரும் மாகாண நன்னடத்தை ஆளுநரின் பதிவிற்கு சமனான அல்லது அவரின் பதவிற்கு மேல் உயர்வான பதவி வகிக்கும் நபர்களாக இருக்க வேண்டும்.

11.3 பரிசீலனையின் தீர்வுகள் கீழ்வருமாறு அமைய வேண்டும் :-

(அ) அச் சிறுவர் இல்லம் பதிவிலிருந்து நிராகரிக்கப்பட்டதன் காரணத்தை விளக்கி சிறுவர் இல்ல முகாமையாளருக்கு அறிவித்தல் ;

(ஆ) சிறுவர் இல்லத்தை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நன்னடத்தை ஆணையாளருக்கு அறிவித்தல் ;

(இ) 3 ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக 1 வருடகால அவகாசம் பெற்றுக்கொடுப்பதுடன் அக்காலப்பகுதிக்குள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வாராயின் அதன்பிறகு இல்லத்தை பதிவு செய்ய அனுமதி வழங்கப்படும்.

அமைச்சரிடத்தில் வேண்டுகோள் விடுத்தல்.

12.11 ஆம் உப பிரிவிற்கமைய கொடுக்கப்பட்ட தீர்வு தொடர்பாக திருப்தி அடையாத தரப்பினருக்கு அத்தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் (இதன் பின்னர் 'அமைச்சர்' என குறிப்பிடப்படும்). ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயப் பொறுப்பான அமைச்சரிடத்தில் வேண்டுகோள் விடுக்க முடியும்.

அமைச்சரின் தீர்ப்பு.

13. 12 உப ஆம் பிரிவிற்கமைய வேண்டுகோள் கிடைத்த தருணத்தில் அவ்வமைச்சர் நன்னடத்தைச் செயலாளருடைய பதிவிற்குச் சமமான அல்லது அதனை விடவும் உயர் பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தர் களினாலோ அல்லது அவ்வாறான பதவியிலிருந்து ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு ஒன்றினாலோ அவ் மீள் பரிசீலனை தொடர்பாக ஆராய்ச்சி நடைபெறுவதோடு அமைச்சரால் 11 (அ), (ஆ) அல்லது (இ) பிரிவுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயப் பொறுப்பான அமைச்சரின் தீர்வு இறுதித் தீர்வாக அமையும்.

முகாமையாளர் சபைக்கு பொறுப்பாக செயற்பட வேண்டும்.

14. சிறுவர் இல்லம் சம்பந்தமான அனைத்து விடய பரப்புகள் தொர்பாகவும் ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்துடன் செயற்படுத்துவதற்கான தகைமையுள்ள ஒரே நபர் அச் சிறவர் இல்லத்தின் முகாமையாளராகும்.

ஆலோசனை பின்பற்றலும் கட்டளைகள் செயற்படுத்தலும்.

15. சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளின் சுவ நலன்கள் அதன் நிருவாக மாகாண நலன்புரி ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு அதிகாரியால் வழங்கப்படும் ஆலோசனையும் கட்டளையும் சந்தர்ப்பத்திற்கு உகந்தவாறு அவ் சிறுவர் இல்லத்தின் முகாமையாளர் சபை சேவையாளர்கள் என்பவர்கள் செயற்படுத்த வேண்டும்.

தகவலும் அறிக்கையும்.

16.1 மாகாண நலன்புரி ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் எழுத்து மூலமான ஓர் அறிவித்தலின் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் தகவல் அல்லது அறிக்கை என்பன சமர்ப்பிக்குமாறு சிறவர் இல்ல முகாமையாளருக்கு கோரலாம்.

16.2 முகாமையாளர் முதலாம் இரண்டாம் பிரிவிற்கு அமைய கோரப்பட்ட தகவல்களை வழங்கும் பொழுது பிழையான அல்லது போலியான தகவல்களை வழங்குதல் தவிரித்துக் கொள்ளல் வேண்டும்.

இறுதி அறிவித்தல்.

17. 15 ஆம், 16 ஆம் பிரிவுகளுக்கு அமைய செயல்படாத பொழுது மாகாண நன்னடத்தை ஆளுநரால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒரு சிறுவர் இல்லத்தின் முகாமையாளர் சபைக்கு அறிவித்தல் ஒன்று பதிவு த் தபால் மூலம் அனுப்புவதற்கு செயல்பட வேண்டும் என்பதோடு அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதிக்குள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு முகாமையாளருக்கோ அல்லது சபைக்கு உத்தரவாதம் இடலாம்.

18. 17 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதிக்கு முன்பதாக செயல்படுவதற்கு ஏதேனும் ஒரு சிறுவர் இல்லத்தின் முகாமையாளரோ அல்லது அச்சபையோ தவறினால் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் மாகாண நன்னடத்தை ஆளுநருக்கு பிரதி ஒன்றுடன் ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சு செயலாளருக்கு. உடன்பாட்டுக்கு அமைய செயற் படாமை தொடர் பாக முகாமை யாளரிடம் கருத்து விபரம்.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அநாதை இல்லங்களின் பொறுப்பாளர்களுடைய செயற்பாடுகள் தொடர்பாக புகார் செய்யப்படும் சந்தர்ப்பங்களில், அது விடயம் தொடர்பில் விசாரிப்பதற்காக ஊவா மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் ஆணையாளர்கள் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்கள் இணைத்துள்ள்ளார்கள்.

19.1 இக்கொள்கைப் பிரகடனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களின் நடத்தை தொடர்பாக புகார்கள் கிடைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு நன்னடத்தை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு என்பதோடு அத் தீர்மானங்களை நடை முறைப்படுத்துவதற்கு சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்:- செயலாளர் பரி சீலனை நடாத்தப் படவேண்டுமென் பது.

(அ) கட்டளை பிரகாரப்படி குறிப்பிட்ட கால எல்லைக்குள் 15 ஆம் அல்லது 16 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுப்பதற்கு அத்தருணத்திற்கு அமைய, முகாமையாளருக்கோ அல்லது சபைக்கு வழியுறுத்தல் ;

(ஆ) 15 ஆம் பிரிவிற்கு அமைய கொடுக்கப்பட்டுள்ள அறிவுரை அல்லது கட்டளைகள் மீள் திருத்தம் செய்தலும் அதற்கும் அமைய செயல்படுமாறு முகாமையாளருக்கு அல்லது சபைக்கோ வழியுறுத்தல்.

அல்லது

(இ) 15 ஆம் பிரிவிற்கு அமைய மாகாண நன்நடத்தை அளுநரால் அல்லது அதிகாரம் கொண்ட உத்தியோகத்தர் ஒருவரால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலை பின்பற்ற அல்லது கட்டளையை செயற்படுத்த தேவையில்லை என்பதோ 16 ஆம் பிரிவின் கீழ் தகவல் அல்லது அறிக்கை சமர்ப்பிக்க தேவையில்லை என அறிவித்தல்.

19.2 16 ஆம் பிரிவின் படி வேண்டுகோள் கிடைத்த திகதியில் இருந்து முப்பது நாட்களுக்குள் ஊவா மாகாண அமைச்சின் செயலாளரினால், அவரின் முடிவை மாகாண நலன்புரி ஆணையாளருக்கு அதன் பிரதி ஒன்றுடன் முகாமையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

20. ஊவா மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளரின் தீர்ப்பு இறுதி தீர்வாகும் என்பதோடு அதை நடைமுறைப்படுத்தாமை இருத்தல் குற்றமாகும். செயலாளரின் தீர்வு இறுதி தீர்வாகும்.

21.1 15 ஆம், 16 ஆம் உட்பட 19 ஆம் பிரிவில் அடங்கிய சட்ட ஒழுங்குகளை ஒரு சிறுவர் இல்லத்தின் முகாமையாளர் அல்லது சபை மூலம் மீறல் செய்த சந்தர்ப்பத்தின் பொழுது ஊவா மாகாண நன்னடத்தை ஆளுநரால் சிறுவர் இல்ல சபையை அதிகார மற்றதாக்குதலும் வேறொரு பொருத்த மான நபரை நியமித்தல்.

21.2 சபையின் தரத்திற்கு உட்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவரோ அல்லது ஓய்வுபெற்ற சபையின் தரத்திற்கு அரச உத்தியோகத்தர் ஒருவரை அல்லது ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளரால் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட பிரசித்தி பெற்ற சமூக செவையாளர் ஒருவர் அவ் சிறுவர் இல்லத்தை நடாத்தி செல்வதற்கான பொருத்தமான அதிகாரியாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

22. 21 ஆம் பிரிவிற்கு அமைய தகுதி வாய்ந்த அதிகாரி ஒரவரை நியமிக்கும் சந்தர்ப்பத்தில் ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளர் அது தொடர்பாக முகாமையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என்பதோடு அவரால் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான அனைத்து நிலையான, நிலையற்றசொத்துக்களையும் அவ்வதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். தகுதி வாய்ந்த அதிகாரியை நியமித்ததன் பின் முகாமையாளரோ செயற்சபையின் அங்கத்தவர்களோ அப் பூமி வலாகத்திற்கோ கட்டிடத்திற்கோ உட்பிரவேசிக்க கூடாது என்பதோடு நிறுவனத்தின் எவ்வித செயற்பாடுகளுக்கும் அவர்கள் உடன்படக் கூடாது. சொத்துக்கள் பொறுப்பளித்தலும் செயற்பாடுகள் தொடர் பாக இடையூறு செய்யாதிருத்தல்.

புதிய முகாமையாளரும் சபையும் அமைத்தல்.

23.1 தகுதிவாய்ந்த அதிகாரியை 12 மாதத்திற்குள் நியமித்து புதிய முகாமையாளரையும் சபையையும் அமைத்துக்கொள்வதற்காக அச் சிறுவர் இல்லத்தை நடாத்திச் செல்லும் தொண்டர் நிறுவனத்தின் அனைத்து அங்கத்தவர்களும் ஒன்று கூடும் வகையில் ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளர் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். அவர்களின் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் புதிய முகாமையாளரின் சபையையும் அமைத்துக்கொள்வதற்கு ஊவா மாகாண நனன்டத்தை ஆணையாளர் செயற்பட வேண்டும்

23.2 முதலாம் பிரிவிற்கு அமைய புதிதாக நியமித்த முகாமையாளருக்கு அச்சிறுவர் இல்லத்தில் அனைத்து நிலையான நிலையற்ற சொத்துக்களையும் அவரின் நியமனத் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரி மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

23.3 இரண்டாம் உட்பிரிவிற்கு அமைய தகுதிவாய்ந்த அதிகாரியால் நிலையான சொத்துக்களையும் நிலையற்ற சொத்துக்களையும் புதிய முகாமையாளருக்கு பொறுப்பளித்த தினத்தில் இருந்து புதிய முகாமையாளர் சபைக்கு பொறுப்பான செயற்பாடுகளில் செயல்படுவதற்கான சட்ட ரீதியான தகுதி கிடைப்பதுடன் அத் தினத்தின் தொடக்கம் தனது செயற்பாடுகளை செம்மையான முறையில் செயற்படுத்த வேண்டும்.

தகமை அற்ற

24. சேவை பூர்த்தி செய்த முகாமையாளர் அல்லது சபையின் அங்கத்தவர் அவரின் சேவையை நிறைவு செய்த தினத்தில் இருந்து 4 வருடங்கள் முடிவதற்கு முன்பதாக வேறு எந்த ஒரு சிறுவர் இல்லத்திலும் முகாமையாளராவோ அல்லது சபையின் அங்கத்தவராகவோ மீண்டும் நியமிக்கப்படாதிருத்தல்.

சிறுவர் இல்லத்தின் பதிவை இரத்து செய்தல்.

25 (அ) சிறுவர் இல்லத்தினை நடாத்தி செல்லும் தொண்டர் அமைப்பின் அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் அச் சிறுவர் இல்லத்தை நடாத்தி செல்ல முடியாது என மும்மொழிந்து பிரேரணையை உறுதி செய்து அதனை அறிவித்தல் ஒன்றின் மூலம் மாகாண நன்நடத்தை ஆணையாளருக்கு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில்

(ஆ) 21 ஆம் பிரிவிற்கு அமைய தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்க முடியாத பட்சத்தில் ;

(இ) நிர்வாக சபை ஏழாம் பிரிவின் விதப்புரையின் கீழ் செயற்படாத சந்தர்ப்பத்தில் ;

(ஈ) மாகாண நன்னடத்தை ஆணையாளரால் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட அதிகாரியின் 19 ஆம், 23 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவுரைக்கும் கட்டளைக்கும் அமைய முகாமையாளரோ அல்லது சபையோ செயற்படாத சந்தர்ப்பத்தில் பரிசீலனை நடாத்திய பின் சம்பந்தப்பட்ட சிறுவர் இல்லத்தின் பதிவை இரத்துச் செய்வதற்கான ஒழுங்குகளை மாகாண நன்னடத்தை ஆணையாளர் செய்திட வேண்டும்.

பதிவை இரத்து செய்வதற்கான அறிவித்தல்.

26. 25 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் ஒரு சிறுவர் இல்லத்தின் பதிவை இரத்து செய்வதற்கு ஊவா மாகாண நன்நடத்தை ஆணையாளரால் தீர்மானம் எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரால் அத்தீர்மானத்திற்கு உடன்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட முகாமையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அறியப்படுத்தல் வேண்டும்.

மீள் பரிசீலனை தொடர்பான அறிவித்தல்.

27.1 பிரிவிற்கு அமைய வழங்கப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக ஏதேனும் ஒரு சிறுவர் இல்லத்தின் முகாமையாளர் இணங்காத பட்சத்தில் அம் முடிவு கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் அவரால் ஊவா மாகாண நன்நடத்தை ஆணையாளருக்கு பிரதி ஒன்றுடன் நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளருக்கு மீள் பரிசீலனை மனு ஒன்று பதிவு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

27.2 1 ஆம் உட்பிரிவிற்கு அமைய மீள் பரிசீலனை மனு ஒன்று முன்வைத்திருக்கும் பட்சத்தில் ஊவா மாகாண அமைச்சின் செயலாளரினால் 28 ஆம் பிரிவிற்கமைவான தீர்மானம் எடுக்கும் வரைக்கும் குறிப்பிட்ட சிறுவர் இல்லத்தினை நடாத்திச் செல்வதற்கான அதிகாரம் அதன் முகாமையாளருக்கும் சபைக்கும் உண்டு.

செயலாளரின் தீர்மானம்.

28.1 27 ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மீள் பரிசீலனை மனுவினை, ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தில் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளரின் பதவிக்கு ஒப்பான அல்லது அதனை உயர்வானதான பதவியினை வகிக்கும் இருவர் கொண்ட குழுவொன்றின் மூலம் மறுபரிசீலனை செய்த பின் செயலாளரினால் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் ஒன்றினை மேற்கொள்ள முடியும்.

(அ) பதிவினை இரத்து செய்தலை உறுதிப்படுத்தல் ;

(ஆ) ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளரின் தீர்மானத்தினை செயல்படுத்தும் வரை பதிவு இரத்து செய்தலினை 4 மாதங்கள் வரை ஒத்தி வைத்தல் ;

(இ) பதிவினை இரத்து செய்வது தொடர்பான மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளரின் தீர்மானத்தை இரத்து செய்தல்.

*28.2 1 ஆம் பிரிவிற்கு அமைய ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சு செயலாளரினால் எடுக்கும் தீர்மானங்கள் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவையின் ஆணையாளருக்கு பிரதி ஒன்றுடன் முகாமையாளரின் மீள் பரிசீலனை மனு கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து 3 மாதத்திற்குள் அவருக்கு செயலாளரினால் அறிவிக்க வேண்டும்.*

*பதிவினை இரத்து செய்த சந்தர்ப்பங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.*

*29.1 25, 28 ஆம் பிரிவின்படி பதிவினை இரத்து செய்துள்ள சந்தர்ப்பங்களில் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவையின் ஆணையாளரால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு அதிகாரியினால் அச்சிறுவர் இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளை வேறொரு சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கு மாற்றவோ பெற்றார் அல்லது பாதுகாவலருக்கோ ஒப்படைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*29. 2 குறிப்பிட்ட பிள்ளையை வேறொரு சிறுவர் இல்லத்திற்கு மாற்றும் போது ஊவா மாகாண நன்நடத்தை ஆணையாளரின் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் அப்பிள்ளையின் மதம் தொடர்பாக கவனம் செலுத்தி, பிள்ளையின் மதம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியுள்ள இடத்திற்கு மாற்றம் செய்ய சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.*

*பதிவினை இரத்து செய்யப்பட்ட சிறுவர் இல்லத்திலுள்ள சொத்துக்களை பொறுப்பளித்தல்.*

*30. பதிவினை இரத்துச் செய்த சிறுவர் இல்லத்திற்கு அரசு மற்றும் ஊவா மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்த நிலையான மற்றும் நடைமுறை சொத்துக்களை தம்மால் முடிவு செய்த வேறொரு சிறுவர் இல்லத்திற்கு வழங்குவதற்கு ஊவா மாகாண நன்நடத்தை ஆணையாளருக்கும் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வேறொருவரினால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் ஒன்றினை அமைத்தல்.*

*31. இக்கொள்கை பிரகடனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் ஒன்றினை அமைத்தல் வேண்டும்.*

*மாகாண நன்நடத்தை ஆணையாளரும் ஆளணியினரும்.*

*32.1 ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக்காக ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும் . அவர் இலங்கை நிர்வாக சேவை- தரம் 1 அதிகாரியாக தகுதி பெற்றிருப்பதுடன் ஊவா மாகாண ஆளுநரால் அவர் நியமிக்கப்படல் வேண்டும்.*

*32.2 நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளருக்கு உதவி செய்வதற்காக நன்நடத்தை உயர் அதிகாரிகளும் சிறுவர் இல்ல பராமரிப்பு அதிகாரிகள் உட்பட வெளிக்கல உத்தியோகத்தர்கள், சேவையாளர்கள் என்போருக்கு வழங்கப்பட்ட கடமைகளை செய்வதற்காக போதுமான ஆளணியினரை கொண்ட ஊவா மாகாண ஆணையாளர் அலுவலகம் ஒன்றினை அமைத்தல் வேண்டும் எனும் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு மாவட்ட, கோட்ட மட்டத்திலான நன்நடத்தை அதிகாரிகள் மூலம் நிர்வகிக்கும் பிராந்திய அலுவலகங்கள் அமைப்பதோடு அந் நன்நடத்தை அதிகாரிகள் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் தமது கடமைகளை செய்ய வேண்டும்.*

*32.3 அநாதை, கைவிடப்பட்ட, ஆதரவற்ற பிள்ளைகளின் நலன் மேம்பாட்டுக்கு தேவையான : அதாவது :-*

*(1) தொண்டர் சிறுவர் நிலையம் ;*

*(2) அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ;*

*(3) தங்கும் விடுதிகள்.*

*போன்ற அமைப்புகள் அமைக்கப்படுவதுடன் அவைகளின் நிர்வாகத்தை நடாத்தி செல்வதற்காக தேவையான அதிகாரிகளை நியமிக்க வேண்டும். இவ் அமைப்பில் உள்ள அதிகாரிகள் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டும்.*

பிள்ளைகளை பொறுபேற்கும் மாகாண சிறுவர் இல்லம்.

33. (இதன் பின்னர் 'பொறுப்பேற்கும் இல்லம்' என அறிமுகப்படுத்தப்படுவது 5 வயதிற்கு குறைவான அநாதை கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பிள்ளைகளின் பாதுகாப்புக்காக பொதுவான உத்தியோகத்தர்கள் அடங்கிய பிள்ளைகளை பொறுப்பேற்கும் மாகாண இல்லம் ஒன்று அமைக்க வேண்டும். அவ் இல்லம் மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு கீழ் பட்டதாகும்.

33.1 பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளும் அளவு தொடர்பாக ஒரு வரையறை இணக்கப்பாட்டினை கொண்டிருக்க வேண்டும் என்பதோடு அத் தொகைக்கு குறைவாக பிள்ளைகளின் அளவு காட்டப்பட்டால் திணைக்களத்தின் அல்லது நீதிமன்றம் மூலம் அனுப்பப்படும் பிள்ளைகளை பொறுப்பேற்க வேண்டும்.

அநாதை கைவிடப் பட்ட மற்றும் ஆதர வற்ற பிள்ளைகள் சம்பந்தமாக தகவல் வழங்குதல்.

34.1 ஐந்து வயதுக்கு குறைவான அநாதை, கைவிடப்பட்ட அல்லது ஆதரவற்ற பிள்ளை ஒன்று தொடர்பாக தகவல் தெரிந்த நபர் ஒருவர் அவர் பதிவாகியுள்ள பிராந்திய பொலிஸ் நிலைய அதிகாரிக்கோ அல்லது எந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கோ ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் அதிகாரிக்கோ அல்லது பிரதேச கிராமசேவையாளருக்கோ அறிவிக்க வேண்டும்.

34.2 5 வயதிற்கு குறைவான அநாதை, கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பிள்ளை தொடர்பாக தகவல் கிடைத்த அதிகாரி ஒருவர் அப்பிள்ளையை அரச வைத்தியசாலையில் அநுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுவர் இல்லத்திற்கு சேர்த்துக் கொள்ளல்.

35.1 34.2 ஆம் பிரிவிற்கு அமைய வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட பிள்ளைக்கு வைத்திய உதவி தேவைப்படாத விடத்து அவ்வைத்திய அதிகாரியினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு அதிகாரி மூலம் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவையின் ஆணையாளருடைய அனுமதியுடன் அப்பிள்ளையை மாகாணத்திலுள்ள பிள்ளையை பொறுப்பேற்கும் இல்லத்திற்கு சேர்த்தல் வேண்டும்.

35.2 அவ்வாறான பிள்ளை ஒருவருக்கு நீதிமன்ற கட்டளை தேவைப்படும் இடத்து வைத்திய பொறுப்பதிகாரி அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு வைத்திய அதிகாரியோ அதன் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிறப்பைப் பதிவு செய்தல் தொடர்பாக.

36. பிறப்பின் பொழுது கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பிள்ளை ஒருவரை வைத்திய சாலையிலிருந்து வெளியேறுவதற்கு முன்பாக அவனின் அல்லது அவளின் பிறப்பு பதிவு சம்பந்தமாக தேவையான அடிப்படை செயற்பாடுகளை வைத்திய பொறுப்பதிகாரியோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு வைத்திய அதிகாரி மூலம் செயற்படுத்தல் வேண்டும்.

பரிசீலனை அறிக் கையொன்றினை சமர்ப்பித்தல்.

37.1 பொறுப்பேற்கும் இல்லத்திற்கு உள்வாங்கப்படும் அனைத்து பிள்ளைகள் தொடர்பாக முழு விவரம் அடங்கிய அறிக்கையொன்று கோட்ட மட்டத்திற்கு பொறுப்பான நன்நடத்தை அதிகாரியோ அல்லது ஊவா மாகாண நன்நடத்தை ஆணையாளரின் அதிகாரத்தை பெற்ற வேறொரு அதிகாரியாலோ அப்பிள்ளை சிறுவர் இல்லத்திற்கு உள்வாங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாற்களுக்குள் மாகாண நன்நடத்தை ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நீதிமன்ற மற்றும் திணைக்களங்கள் தவிர ஏனைய சிறுவர் நிறுவனங் களுக்கு இணைத் துக்கொள்ளள்

நீதிமன்ற அல்லது திணைக்களங்களினூடாக அனுப்பப்படும் சிறுவர்கள் தவிர வேறு பிள்ளைகளை நிறுவனத்தில் இணைத்துக்கொள்வதானால் அது தொடர்பாக ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளருடைய அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

37.2 பொறுப்பேற்கும் இல்லங்களுக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளின் நிலையான வதிவு சம்பந்தமான செயற்பாட்டினை ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக அவர் 38 ஆவது பிரிவின் கீழ் நியமிக்கப்படும் வதிவிட சங்கத்தின் உதவியை பெற்றுக்கொள்ளலாம்.

வதிவிட சங்கம்.

38.1 வதிவிட சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் இடம்பெறுவர்:-

(அ) ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளர் வதிவிட சங்கத்தின் தலைவர் ஆவார் ;

(ஆ) ஊவா மாகாண மத்திய நிலைய நன்னடத்தை அதிகாரி ;

(இ) நிலைய பொறுப்பான நன்னடத்தை அதிகாரி ;

(ஈ) நிலைய பொறுப்பான மேட்ரன் ;

(உ) உதவி மேட்றன்.

*38.2* தனியார் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருக்கும் பிள்ளையை பொறுப்பேற்கும் இல்லத்திற்கு மாற்றும் பொழுது இல்லத்தின் முகாமையாளர் ஊவா மாகாண நன்னடத்தை ஆணையாளருடைய கட்டளைப்படி செயல்பட வேண்டும்.

*38. 3* தொண்டர் சிறுவர் விடுதியில் இருக்கும் பிள்ளைகள் தொடர்பாக ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஊவா மாகாண நன்நடத்தை ஆணையாளருடைய அல்லது அவரின் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருடைய ஒத்துழைப்புடன் வதிவிட கமிட்டி செயல்பட வேண்டும்.

*39.* சிறுவர் இல்லம் ஒன்றிலோ பிள்ளைகளை பொறுப்பேற்கும் மாகாண இல்லமொன்றில் வசிக்கும் எந்த ஒரு பிள்ளையையும் இல்லத்தின் முகாமையாளரோ அங்கு சேவை செய்யும் சேவையாளர்களில் ஒருவரோ துஷ்பிரயோகம் அல்லது கடத்தல் , சித்திரவதைக்குள்ளாக்குதல், கேலி செய்தல், அதிக வேலை பழுவினை வழங்குதல் போன்றவைகளுக்கு உற்படுத்தக்கூடாது. சிறுவர் துஷ்பிரயோகம் செய்வதோ கடத்தல் செய்வதோ தவிர்க்கப்படல்.

*40. 1* யாதேனும் ஒரு நபரால் - குற்றங்கள்.

(அ) இக்கொள்கை பிரகடனத்திற்கு அமைய வழங்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஏற்ப வழங்கப்படவேண்டிய தகவலோ அல்லது அறிக்கையோ வழங்குவதற்கு மறுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்லது ;

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தகவலை அல்லது அறிக்கை ஒன்றினை அறிந்திருந்தும் பிழையான தகவலை வழங்கிய சந்தர்ப்பத்தில் அல்லது இக்கொள்கை பிரகடனத்தின் சட்டதிட்டங்களையோ அதற்கமைய கொடுக்கப்பட்டுள்ள கட்டளை விதிகளையோ மீறிய சந்தர்ப்பத்தில் அந் நபர் அக்கொள்கை பிரகடனத்திற்கு அமைய குற்றவாளி ஆவார்.

*40. 2* இக்கொள்கை பிரகடனத்திற்கு ஏற்ப குற்றம் செய்த நபர் ஒருவருக்கு அதற்காக வேறு விசேட சட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்காத பட்சத்தில் அக்குற்றத்திற்காக அவர் குற்றவாளி ஆவார் என்பதோடு நீதவான் முன்னிலையில் இடம்பெறும் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர் ஐயாயிரம் ரூபாய்க்கு குறையாத அபராதம் அல்லது ஆறு மாதத்திட்குட்பட்ட சிறைத் தண்டனை அல்லது தண்டப்பணத்துடன் கூடிய சிறை தண்டனைக்கு ஆளாவார். அவ்வாறு பெற்ற தண்டனை நிறுவனங்களில் முகாமைத்துவ குற்றச் செயல் பட்டியலில் உள்ளடக்கப்படும்.

*40. 3* தனியார் குழுக்கள் மூலம் இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் குற்றம் செய்த சந்தர்ப்பத்தில் -

(அ) அத்தனியார் அமைப்பு கூட்டுத்தாபனமாயின் அக்கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும் அதிகாரியுமோ ;

(ஆ) அத்தனியார் அமைப்பு ஒரு வர்த்தக அமைப்பாயின் அவ் வர்த்தக அமைப்பின் ஒவ்வொரு பங்காளரும் ;

(இ) அத்தனியார் அமைப்பு சிறுவர் இல்லத்தின் முகாமைத்துவ சபையாக இருப்பின் ஒவ்வொரு அங்கத்தவரும் ;

குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

*41. 1* இக்கொள்கை பிரகடனத்தின் சட்ட ஒழுங்குகளை செயற்படுத்துவதற்கு தேவையான நிதியை ஊவா மாகாண சபை மூலம் ஆண்டுதோறும் ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர்பராமரிப்பு திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்திற்கான நிதி ஒதுக்கீடு.

*41.2* அரசு அல்லது ஏனைய பிரிவுகளிலிருந்து ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்திற்கு வழங்கப்படும் நிதி இக்கொள்கை பிரகடனத்தின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும்.

*41.3* பொறுப்பேற்கும் இல்லத்திற்கு தேசிய அமைப்புகளின் அல்லது நபர்களிடம் இருந்து கிடைக்கும் அனைத்து நிதி உதவிகளும் வெளிநாட்டு அமைப்புகள் அல்லது வெளிநாட்டவர்களிடம் இருந்து கிடைக்கும் அனைத்து நிதி உதவிகள் தொடர்பாக விவரக்கோவை ஒன்று நடாத்திச் செல்லல் வேண்டும் என்பதோடு அவ் அறிக்கை விவரங்கள் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் அவ் நிதி விவரம் தொடர்பாக பரிசீலனை செய்யும் அதிகாரம் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி ஒருவருக்கு உண்டு.

நிதியம் ஒன்றை நடாத்திச் செல்லல்.

*41.4 ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் செயல்படும் நிறுவனங்களில் உள்ள சிறுவர்களின் ஆக்கங்களில் விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் நிதியை இக் கணக்கின் வரவில் பதிவு செய்யலாம்.*

*இக் கணக்கு நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளரின் பொறுப்பின் கீழ் செயல்படும் இக் கணக்கின் நிதியை பயன்படுத்துவதற்கு விடய பொறுப்பான செயலாளரின் அனுமதியை பெறல் வேண்டும். அவ் நிதியை அவ் இல்ல சிறுவர்களின் நலனுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந் நிதியை அரசு கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதோடு கணக்கின் அறிக்கைகள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

பராமரிப்பு கொடுப்பனவு.

*42.1 இக்கொள்கை பிரகடனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சகல சிறுவர்களினதும் பராமரிப்பிற்காக வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ஒன்றை இல்லப்பொறுப்பான முகாமையாளருக்கான நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் வழங்க வேண்டும்.*

*42.2 சிறுவர் இல்லத்தின் தொண்டர் நிறுவனங்கள் மூலம் பொது கூட்டத்தின் பொழுது முன்வைக்கப்படும் சிறுவர் இல்ல வருடாந்த கணக்கறிக்கை அங்கீகாரம் பெற்ற கணக்காளரினால் அல்லது கணக்காய்வாளரினால் தயாரிக்கப்பட இக் கணக்கறிக்கை வருடாந்தம் மாச்சு மாதம் 1 ஆந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பதாக முகாமையாளரால் ஊவா மாகாண நன்னடத்தை ஆளுநருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.*

கட்டளை.

*43.1 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை விடயப்பொறுப்பான அமைச்சர் இக்கொள்கை பிரகடனத்தின் சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டளை பிறப்பிக்க முடியும் என்பதோடு அதை மாகாண சபையின் அங்கீகாரம் பெறுவதற்கு முன்வைக்க வேண்டும்.*

*43.2 அவ்வாறு அனுமதிக்காத ஒரு கட்டளைக்கு அனுமதி கிடைக்கும் திகதி வரை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதாக கருத முடியும் என்றாலும் அதற்கமைய அதற்கு முன்பு செயல்படுத்திய செயல்களுக்கு அது பங்கம் விளைவிக்காது.*

*44. ஒவ்வொரு காலாண்டுக்கும் கணக்கு நடவடிக்கைகள் கணக்காய்வு திணைக்களமும் மற்றும் ஊவா மாகாண சபையின் உள்ளக கணக்காய்வு பணிப்பாளரினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதோடு 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம், மாகாண சபை சட்ட பிரகாரத்தின்படி 2 3 ஆம் பிரிவிற்கமைய அமைய வேண்டும்.*

ஆண்டின் கருத்தெளிவு.

*45. இக்கொள்கை பிரகடனத்தின் சொற்பிரயோகங்கள் சம்பதந்தமாக வேறு விளக்கங்கள் தேவைப்படுமிடத்து:-*

*“மாகாண சபை” - ஊவா மாகாண சபை ;*

*“ஊவா மாகாணம்”- பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்குட்பட்ட பிரதேசங்கள் உள் அடங்கும்.*

*“ஆளுநர்” - ஊவா மாகாண ஆளுநர்.*

*“அமைச்சர்” - ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயப்பொறுப்பான அமைச்சர்.*

*“ஆணையாளர்” - ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயப்பொறுப்பு ஆணையாளர்.*

*“கடத்தல்”- தண்டனை சட்ட கோவையில் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திற்கு ஒத்ததாகும்.*

*“துஷ்பிரயோகம்” - தண்டனை சட்ட கேவையில் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திற்கு ஒத்ததாகும்.*

*“கைவிடப்பட்ட” - அநாதை இல்லத்தின் சட்ட கோவையின் (142 ஆவது சரத்தில்) அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திற்கு ஒத்ததாகும்.*

"அமைவு சங்கம்" - சிறுவர் இல்லத்தில் அல்லது சிறுவர்களை இணைத்துக்கொள்ளும் மாகாண இல்லத்தில் விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளையொன்று பிள்ளையின் பெற்றோர் அல்லது உறவினர்கள் அல்லது பொறுப்பான நபர் ஒருவருக்கு பொறுப்பளித்தல் அல்லது பிள்ளைகளின் நலன் கருதி சமுகமயமாக்குதல் என்பதை குறிக்கும்.

46. இக்கொள்கை பிரகடனத்தின் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் உடன்பாடு காணப்படாதவிடத்து சிங்கள மொழி ஏற்புடையதாக கருதப்படும். மொழி பிரயோகம்.

இணைப்பு இலக்கம் : 1.

**தொண்டர் சிறுவர் இல்லங்களின் சேவைகளை மேம்படுத்துவதற்கான பொது அளவுகளை நியமித்தல்**

தொண்டர் சிறுவர் இல்லங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் அநாதை, கைவிடப்பட்ட ஆதரவற்ற பிள்ளைகளின் பாதுகாப்பு அரவணைப்பு மற்றும் அவர்களின் நலன்கள் தொடர்பாக, பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் அச் சிறுவர் இல்லத்தை நடாத்தி செல்வது என்பது தொண்டர் நிறுவனம் மேற்கொள்ளும் சிறப்பான சேவையாகும். அரச உதவியுடன் இத் தொண்டர் அமைப்புகள் மூலம் நடாத்தி செல்லப்படும் சிறுவர் இல்லங்களில் குறைந்த பட்சம் காணவேண்டிய சேவைத் தன்மைகளை தீர்மானித்து அத்தரத்தை மென்மேலும் மேம்படுத்துவதற்காக ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு சிபாரிசின் மூலம் அனுமதி கிடைக்கப்பெற்ற பொது அளவுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தால் சிறுவர் இல்லத்தை நடாத்தி செல்வதற்கான உதவி வழங்கள் அவ்வுதவி வழங்கள் சம்பந்தமான அனுமதி வழங்கும் பொழுது அனைத்து பிள்ளைகளுக்கும் ஓர் உயர்வான சேவையை வழங்குவதற்கு ஏதுவாக இப்பொதுவான அளவு மட்டத்தின் போது கருத்தில் கொள்வதுடன், ஏற்ற சேவையை நிறைவேற்றுவதற்காக மிக விரைவாக தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் அறிவிக்கின்றோம்.

1 **கட்டிடம் மற்றும் சுற்றுப்புறம் சம்பந்தமான அளவு** :

1. 1 ஒரு பிள்ளைக்கு உறங்குவதற்காக 36 சதுர அடி அடங்கிய இடவசதி கட்டிடத்தில் இருக்க வேண்டும்.

1.2 இதற்கு மேலதிகமாக உணவு உண்பதற்கு, படிப்பதற்கு, ஓய்வெடுப்பதற்கு, விருந்தினர்களை சந்திப்பதற்கும் கூடிய எண்ணிக்கையிலான பிள்ளைகள் கூடியிருப்பதற்கும் ஏற்றவாறு இட ஒதுக்கீடுகள் கட்டிடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

1.3 இல்லத்திற்கு தேவையான சூரிய ஒளி காற்று என்பவை கிடைப்பதற்காக 1/7 சதுர அளவான கதவு ஜன்னல்கள் இருக்க வேண்டும்.

1.4 சேவையாட்களுக்கு தேவையான இட ஒதுக்கீடு வேறாக இருக்க வேண்டும்.

1.5 கட்டிடங்களை சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக்கொள்வதோடு சூழலில் உள்ள வீட்டுத்தோட்டத்தை இல்லத்திற்கு பயன் உள்ளதாகவும் நடாத்தி மனோரம்மியமாகவும் நடாத்தி செல்லல் வேண்டும்.

1.6 இல்லத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு நீர்விநியோகம் செய்திருத்தல் வேண்டும்.

1.7 தேவையான நீரை கிணற்றில் பெற்றுக்கொள்வதாக இருந்தால் கிணறு பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

1.8 பிள்ளைகளுக்கும் சேவை செய்பவர்களுக்கும் நீராடும் பொழுது தேவையான அளவிற்கு பாதுகாப்பும் கரிசனையும் இருக்க வேண்டும்.

1.9 இல்ல விடுதியில் தங்கியிருக்கும் 10 நபர்களுக்கு ஒரு மலசலகூடம் வீதம் இருக்க வேண்டும்.

1.10 தொற்று நோய் தடுப்பு மருந்துகள் என்பவற்றை உபயோகித்து உடனுக்குடன் மலசலகூடம் அது சம்பந்தப்பட்ட வடிகால் என்பவற்றை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.11 அனைத்து இல்லங்களுக்கும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இரவில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

1.12 மண்ணெண்ணெய் விளக்கு பாவனை செய்பவராயின் பாதுகாப்பான விளக்குகளை உபயோகித்தல் வேண்டும்.

**2. உணவு சம்பந்தமான எடுகோள்கள் :**

2.1 விடுதியில் தங்கியிருப்பவர்களுக்கு வழங்கப்படும் உணவு போசாக்கான நிறை உணவாக இருத்தல் வேண்டும் என்பதோடு குறிப்பிடப்பட்ட அளவுகளையும் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும்.

2.2 வயதுக்கு ஏற்ப உணவு அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2.3 ஒவ்வொரு நாட்களிலும் வழங்கப்படும் உணவு வகை அதன் அளவு சம்பந்தமாக தகவல் அறிக்கை பேணப்பட வேண்டும்.

2.4 குறைந்தபட்சம் ஒருவாரத்திற்கு தேவையான அரிசி , தேங்காய், சீனி, மா என்பவற்றை வைத்திருப்பதோடு ஏனைய சமையல் பொருட்கள் 3 நாட்களுக்கு போதுமான அளவு இருப்பில் இருத்தல் வேண்டும்.

**3. பிள்ளைகளின் உடை சம்பந்தமான எடுகோள் :**

3.1 அனைத்து பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு போர்வையும் துவாய் (டவல்) வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

3.2 சிறுவர் இல்லத்தில் அணிவதற்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் இரண்டு உடைத்தொகுதிகளும் பாடசாலை செல்லும் பிள்ளை ஒன்றுக்கு பாடசாலை சீருடை 3 தொகுதிகளும் விழாக்களின் பொழுது அணிவதற்கு பொருத்தமான நல்ல உடை ஒரு தொகுதியும் குறைந்த பட்சம் வைத்திருக்க வேண்டும்.

3. 3 பிள்ளைகள் செல்லும் பாடசாலை ஒழுங்குகளுக்கு அமைய பிள்ளைக்கு பாதணிகள் காலுறைகள் (சொக்ஸ்) என்பன பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

**4. உபகரணங்கள் சம்பந்தமான எடுகோள்கள் :**

(அ) வீட்டு உபகரணம் :

4. 1 6 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் உடை, புத்தகம், தனக்கு சொந்தமான பொருட்கள் என்பவற்றை வைத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு அலுமாரி வீதம் இருக்க வேண்டும்.

4. 2 6 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் உடைகள் ஏனைய உபகரணங்களை வைத்துக்கொள்வதற்காக பொதுவான ஒரு அலுமாரி இருக்க வேண்டும்.

4.3 அனைத்து பிள்ளைகளுக்கும் நித்திரை கொள்வதற்காக கட்டில் ஒன்று வீதம் இல்லாதவிடத்து குறைந்த பட்சம் பாய் அல்லது கெண்வஸ் விரிப்பு மற்றும் தலையணை இருக்க வேண்டும். நன்கொடை வழங்குபவர்கள் மூலமாவது கூடிய விரைவில் பிள்ளைகளுக்கு கட்டில் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.4 இல்ல விடுதியில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு உணவு உண்பதற்காகவும் மற்றும் வாசிகசாலைக்கும் போதியளவு மேசைகள் கதிரைகள் இருக்க வேண்டும்.

(ஆ) பீங்கான் கோப்பைகள் :

4.5 1 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் இலகுவாக சுத்தம் செய்துக்கொள்ளக்கூடிய பீங்கானோ அல்லது கோப்பையோ இருக்க வேண்டும்.

4.6 குழந்தைகளுக்கு தேவையான பால் போத்தலும் அதற்கு போத்தல் சூப்பி இருக்க வேண்டும்.

4.7 அனைத்து பிள்ளைகளுக்கும் அதிகாரிகளுக்கும் போதிய அளவிலான பொதுவான உபகரணங்கள் மற்றும் சமையலறைகளுக்கு தேவையான உபகரணங்கள் இருக்க வேண்டும்.

(இ) கல்வி உபகரணங்கள் :

4.8 பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு அப்பாடசாலையில் நியமிக்கப்படும் புத்தகங்கள் உபகரணங்கள் பெற்றுக்கொடுத்தல்.

4.9 பிள்ளைகளுக்கு ஓய்வு நேரத்தில் வாசிப்பதற்கான தேவைக்கு ஏற்ப வசதியை கொண்ட வாசிகசாலை இருக்க வேண்டும்.

4.10 நாளாந்த பத்திரிகை மற்றும் வாராந்த சிறுவர் பத்திரிகை பெற்று கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும்.

4.11 விநோத செயற்பாடுகளுக்கு தேவையான உபகரணங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு போதியளவு பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) பிள்ளைகளின் சுய ஆற்றல்கள் விருத்தி அடையும் வகையிலும் ஓய்வு நேரத்தை மிக பயனுடையதாக அமைவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களையும் பெற்றுக்கொடுப்பது பயனுடையதாக அமையும்.

4.12 வானொலி பெட்டியொன்று

4.13 சங்கீத உபகரணங்கள்

4.14 3 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு குறைந்த பட்சம் ஒவ்வொரு விளையாட்டு பொருட்கள் வீதம்

4.15 பிள்ளைகளின் இரசணைக்கு ஏற்ப ஓய்வு நேரத்தை கழிப்பதற்கான உகந்த உபகரணங்கள்.

(உ) விளையாட்டுக்கான வசதிகளும் உபகரணமும் .

4.16 அனைத்து இல்லங்களின் விடுதியில் தங்கியுள்ள பிள்ளைகள் வெளியில் விளையாடுவதற்கு போதுமான அளவில் ஒரு விளையாட்டு மைதானமாவது இருக்க வேண்டும்.

4.17 இல்லத்திற்கு சொந்தமான ஒரு விளையாட்டு மைதானம் இல்லாவிட்டால் வெளியில் உள்ள பொது அல்லது பாடசாலை மைதானம் ஒன்றை உபயோகிப்பதற்கான ஒழுங்குகளை செய்திருக்க வேண்டும்.

4.18 இல்லத்திற்கு போதுமான வெளி விளையாட்டு மைதானத்தில் விளையாட கூடிய உபகரணங்கள் பெற்றிருக்க வேண்டும்.

4.19 இல்லத்திற்கு தேவையான உள்ளக விளையாட்டு உபகரணங்கள் பெற்றிருக்க வேண்டும்.

**5. சேவை வரையறை**

இல்லத்தில் உள்ள பிள்ளைகளின் பாதுகாப்பு அரவணைப்பு மற்றும் அவர்களின் நலன் மேன்பாட்டுக்காக சிறுவர் இல்லத்தின் சேவைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும்.

(அ) நடத்துநர் செயற்குழு.

5.1 செயல் கமிட்டி குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும் என்பதோடு 3 மாதத்திற்கு ஒரு முறை சிறுவர் இல்லத்தில் கூட்டம் நடைபெற வேண்டும்.

5.2 சிறுவர் இல்ல பராமரிப்புக்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ளல் பராமரிப்பு மற்றும் பிள்ளைகளை இல்லத்தில் தங்க வைப்பது என்பன தொடர்பாக முறையான செயல் திட்டம் இருக்க வேண்டும்.

5.3 திணைக்களத்தின் ஒழுங்குகள் ஆலோசனைகள் என்பவற்றுக்கு அமைய இல்லத்தை நடாத்தி செல்லல் அவ்வப்போது சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை தொடர்ச்சியாக சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு தேவையான ஒழுங்குகளை செய்திருத்தல் வேண்டும்.

5.4 முகாமையாளர் மற்றும் சேவையாளர்களின் ஒழுக்காற்றல் சீராக இருக்க வேண்டும்.

5.5 திணைக்களத்தால் கோரப்பட்டுள்ள பராமரிப்பு நிதியை முறையாக செலவு செய்தல் மற்றும் வருடம் தோறும் அரசினால் வழங்கப்படும் உதவியை வழங்குவதற்கு முன்பதாக முகாமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கு பரிசோதகரால் உறுதி செய்த கணக்கு விவர அறிக்கை ஒன்றை திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். இச்செயல்பாட்டுக்கு பதிவு செய்யப்பட்ட கணக்கு பரிசோதகர் ஒருவரை தெரிவு செய்வதற்கு வாய்ப்பு கிடைக்காத பட்சத்தில் பட்டியலில் பெயரிடப்பட்ட அதிகாரி ஒருவர் மூலம் அச்செயலை செய்துக்கொள்ள வேண்டும்.

5. 6 கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கோவைகள் இல்லத்தில் இருக்க வேண்டும்:-

* சேர்வு இடாப்பு
* நாளாந்த வரவு புத்தகம்
* கணக்கு புத்தகம்
* லொக் (சம்பவத்திரட்டு) புத்தகம் (திணைக்கள அதிகாரிகளுக்காக)
* விருந்தினர் புத்தகம்
* இல்லத்தில் தங்கியுள்ள ஒவ்வொருவருக்கு தனித்தனியான கோவை
* பொருட்பதிவுப் புத்தகம்
* உ ணவு பதிவுப் புத்தகம்

5. 7 திணைக்களத்தினால் வழங்கப்படும் அனைத்து பொருட்களையும் உபகரணங்களையும் பொருட்கள் பதிவு செய்யும் புத்தகத்தில் பதிவு செய்து அதை வருடாந்தம் பரிசீலனை செய்திருத்தல் வேண்டும்.

**சேவையாட்கள் தரம்**

(அ) சிறுவர் இல்லத்தில் கடமை புரியும் அனைத்து நபர்களும் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சி நெறிகளில் பங்கு பெற வேண்டும். 1987 ஆம் ஆண்டிற்கு முன் அனைத்து இல்லங்கலும் அன்னையர்கள் தந்தை உதவி பொறுப்பாளர் அன்னை தந்தை ஆகியோர் இபப்யிற்சி நெறியை பெற்றலர்களாக இருக்க வேண்டும்.

5. 8 அனைத்து சிறுவர் இல்லங்களிலும் பயிற்றப்பட்ட அன்னையும்/தந்தையும் பொறுப்பாளராக இருக்க வேண்டும்.

பொறுப்பாளரான அன்னைக்கும்/ தந்தைக்கும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பயிற்சிக்கு மேலதிகமாக கீழ்காணும் தகைமைகள் இருக்க வேண்டும்.

(1) கா. பொ. த (சாதாரணதர) சித்தியடைந்திருக்க வேண்டும். (தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு இவ்விதி முறைகள் ஏற்புடையதல்ல) ;

(2) 25 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும் (சிறுவர் பராமரிப்பு சம்பந்தப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதேனும் பயிற்சி ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் ;

(3) சிறந்த ஒழுக்கம், செயற்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும் .

5. 9 பொறுப்பான அனைத்து அன்னையர்களும்/ தந்தையர்களும் சிறுவர் இல்லத்தில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

5.10 பிள்ளைகள் யாவரும் இரண்டு வயதிற்கு குறைவான ஒவ்வொரு 5 பிள்ளைகளுக்கும் ஒரு இல்லத்தாய் விகிதம் இருக்க வேண்டும்.

5.11 பிள்ளைகள் இரண்டு தொடக்கம் 6 வயது வரையிலானவர்களாக இருப்பின் 10 பிள்ளைகளுக்கு ஒரு இல்லத்தாய் விகிதம் இருக்க வேண்டும்.

5.12 6 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு 25 பிள்ளைகளுக்கும் பொறுப்பான தாய் அல்லது தந்தை ஒருவரும் அவரோடு இல்லத்தாய் உட்பட ஒரு இல்ல வழிநடத்துநர் (ஆசான்) விகிதம் இருக்க வேண்டும்.

**இல்லத்தாய்/இல்ல வழிநடத்துநர் (ஆசான்) இருக்க வேண்டிய தகைமைகள்**

(1) தரம் 8 இல் சித்தியடைந்திருத்தல் (தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு இந் நியதி ஏற்புடையதல்ல) ;

(2) 21 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். (இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளை இதற்காக அநுமதிப்போமாயின் அவர்கள் 18 வயதை பூர்த்தி செய்தவர்களாக இருக்க வேண்டும் ;

(3) நல்ல செயற்றிறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும் .

இதற்கு புறம்பாக உணவு பரிமாறல் சுற்றுப்புறங்களில் சுத்தம் செய்தல் என்பவற்றுக்கு பணியாட்களை நியமித்துக்கொள்ள வேண்டும். காவல் தொழில் மற்றும் தோட்ட வேளைகளுக்கு நிரந்தர பணியாட்களை நியமித்தல் அவர் நன்னடத்தை உள்ள 45 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**மேலதிக சேவை வசதிகள் சம்பந்தமான வரையறை**

5.13 சிறுவர் இல்லத்தை சுகாதார மற்றும் வைத்திய சேவை நிலையத்திற்கு அருகில் அமைக்க வேண்டும்.

5.14 பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் வைத்திய தேவைகளை அவ்வப்பொழுது சிறுவர் இல்லத்திற்கு வருகை தந்து பரிசீலிப்பதற்கும் அந் நிலையங்களுக்கு பிள்ளைகளை கூட்டிசென்று நிவாரணம் பெற்றுக்கொள்வதற்கும் சுகாதார திணைக்களத்தின் அல்லது தனியார் வைத்தியர் ஒருவரிடம் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

5.15 பிள்ளைகளுக்கு தேவையான எதிர்ப்பு சக்தியை பெற்றுத்தரும் ஊசி மருந்து வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

5.16 பிறப்பு சான்றிதழ் இல்லாத பிள்ளைகள் சம்பந்தமாக கோட்டமட்டத்திற்கு பொறுப்பான நன்னடத்தை அதிகாரியின் உதவியுடன் அருகில் உள்ள அரச வைத்தியரிடம் தொடர்புகொள்ள வேண்டும் உத்தேசித்த பிறப்பு சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

5.17 சிறுவர் இல்லத்திற்கு அனுமதிக்கப்படும் அனைத்து பிள்ளைகளுக்கும் வைத்திய குறிப்பு அட்டை பெற்றிருக்க வேண்டும் என்பதோடு அனைத்து பிள்ளைகளையும் வருடாந்தம் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி பிள்ளையின் உயரம் நிறை என்பவற்றை இணங்கண்டுகொள்ளும் வகையில் குறியீடுகளையும் அதில் பதிவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
5.18 வைத்திய குறிப்பேடுக்கு ஏற்ப போசாக்கு குறைவான பிள்ளைகளை போசனை நிலையங்களுக்கு அனுப்புவதற்காக உதவியாணையாளரின் ஆலோசனைப்படி செயற்பட்டிருக்க வேண்டும்.

**கல்வி சேவையின் அளவு மட்டம்**

5.19 6 வயதிற்கு கூடிய அனைத்து பிள்ளைகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாடசாலைக்கு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

5.20 6 வயதிற்கு குறைந்த 3 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் அனைவரையும் அருகில் உள்ள முன்பள்ளி பாடசாலை கற்றல் செயற்பாடுகளுக்கு அனுப்புவதற்கோ அல்லது அவ்வாறான வகுப்பறை செயற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு முறைகள் செய்திருக்க வேண்டும்.

5.21 சிறுவர் விடுதி நேரசூசியில் தினந்தோறும் கற்றலுக்கும் விளையாடுவதற்கும் போதுமான நேரத்தை ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும்.

5.22 பிள்ளைகளுக்கு ஏதேனும் ஒரு தொழில் பயிற்சியை வழங்குவதற்கு வேலைத்திட்டங்கள் செய்திருக்க வேண்டும்.

5.23 விசேடமாக 14 வயதை கடந்த பாடசாலை கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெறாத அல்லது விசேட தொழில் சம்பந்தமாக விருப்பும் திறமையும் மிக்க பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கான ஒழுங்குகளை செய்திருக்க வேண்டும். திணைக்களத்தின் உதவியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள சிறுவர் விடுதிகளுக்கு தகைமையுள்ள பிள்ளைகளை அனுப்புவதற்காக கோட்ட மட்டத்திற்கு பொறுப்பான உதவியாணையாளரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. அவ்வாறான மத்திய நிலையங்களின் பெயர் பட்டியல் இதனுடனுள்ள இணைப்பு இரண்டில் உள்ளது.

**பிள்ளைகளின் வளர்ச்சி சம்பந்தமாக விசேட சேவைகள்**

5.24 விடுதிக்கு அனுமதிக்கும் பொழுது ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும் குறிப்புகள் பதிவு செய்து கொள்ளும் வகையில் ஒரு தனிநபர் கோவை நடாத்தி செல்லப்பட வேண்டும். இக்கோவையில் பின்தங்கிய பிள்ளைகள் தொடர்பாக மாதத்திற்கு ஒருமுறை குறிப்பு பதிவு செய்யப்பட வேண்டும் என்பதோடு ஏனைய பிள்ளைகள் தொடர்பாக 6 மாதங்களிற்கு ஒருமுறை குறிப்பெழுத வேண்டும். ஒவ்வொரு தனிநபர் கோவையிலும் கீழ்க்காணும் விடயங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

5.25 பிறப்புச் சான்றிதழ் பாடநெறிசான்றிதழ் மற்றும் உணவு முத்திரை இருப்பின் அவை தொடர்பான குறிப்புகள் குறிக்கப்பட வேண்டும். பிறப்புச் சான்றிதழ் இல்லாத பட்சத்தில் உத்தேசித்த பிறப்பு சான்றிதழும் உணவு முத்திரை இல்லாத பட்சத்தில் உணவு முத்திரை பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளையும் இல்ல பொறுப்பு அதிகாரி மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

5.26 பிள்ளையின் உயரம், நிறை மற்றும் வைத்திய குறிப்புகள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். (இரண்டு வயதிற்கு குறைவான பிள்ளைகள் தொடர்பாக 6 மாதங்களில் ஒரு முறை).

5.27 பிள்ளையின் உடல், உள நன்னடத்தை சம்பந்தமாகவும் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5.28 பெற்றோர்கள், பாதுகாப்பாளர்கள் சந்திப்பு சம்பந்தமாக குறிப்பு வைத்திருக்க வேண்டும்.

5.29 பரிசீலனை கமிட்டியின் விசேட தீர்மானங்கள் சம்பந்தமான குறிப்புகள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5.30 எதிர்ப்பு சக்தி, தடுப்பூசி வழங்கப்படும் திகதிகள், அது தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக நன்னடத்தை மற்றும் நலன்புரி அதிகாரியிடம் கலந்தாலோசித்து தேவையாயின் விசேட நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை மேற்கொண்டு அது தொடர்பான விவரங்களை பதிவு செய்திருக்க வேண்டும்.

**6. மேம்பாட்டு திட்டமிடல்**

விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அனைத்து பிள்ளைகளுக்கும் தேவையான பாதுகாப்பு அரவணைப்பு ஏற்படுத்தலும் கூடிய விரைவில் பிள்ளையை மீண்டும் சமூகமயமாக்குதலுக்கு தேவையான அனைத்து செயல்பாடுகளையும் செய்வதற்கு சிறுவர் மேம்பாட்டு கமிட்டி முன்வர வேண்டும்.

குறுகிய கால எல்லைக்குள் மாதாந்தம் ஒரு பிள்ளையை விடுதியில் வைத்திருப்பது பிள்ளையின் நலன் மேம்பாட்டுக்கு உறுதுணையாவதோடு மறுபுறம் நாளுக்கு நான் விடுதிக்கு புதிதாக சேரத்துக்கொள்ளப்படும் பிள்ளைகளுக்கும் ஒருவாய்ப்பளிப்பதற்கு அது உறுதுணையாகும்.

மேம்பாட்டு திட்டமிடல் என்பதில் குறிப்பிடுவது யாதெனில் விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகள் தொடர்பாக உடனுக்குடன் ஆராய்ந்து இனங்காணும் வகையில் அல்லது அவர்கள் எதிர்கால நலன் கருதி செயல்பாடுகளை திட்டமிடலாம்.

6.1 பெற்றோர்கள் பொறுப்பாளர்கள் உள்ள அல்லது அவர்கள் தேடிக்கொள்ளக்கூடிய அனைத்து பிள்ளைகள் சம்பந்தமாக பெற்றோருக்கு /பொறுப்பானவற்றுக்கு பிரச்சினைகள் இல்லாவிடின் அவ்வாறான பிள்ளைகளை அவர்களிடம் ஒப்படைத்தல்.

6.2 பெற்றோர்/பொறுப்பானவர்கள் இருப்பினும் அவர்களுக்கு பிள்ளைகள் சம்பந்தமாக செயல்பட இயலாத சந்தர்ப்பத்தில் அதற்கு வேறு பொருத்தமான நபரின் கீழ் பிள்ளைகளை பராமரித்தல்.

6.3 அநாதை கைவிடப்பட்ட மற்றும் உதவியற்ற பிள்ளைகளை பெற்றோர்களின் எழுத்து மூலமான விருப்பத்தை வழங்கியுள்ள பிள்ளைகளை சட்டரீதியான வளர்ப்பு பிள்ளைகளை வளர்ப்பதற்கு அனுமதி கொடுத்தல்.

6.4 குறுகிய அல்லது நீண்ட கால அடிப்படையில் பிள்ளைகள் முன்னேற்றமடையும் வகையில் பராமரிப்பு பெற்றோர்களிடம் ஒப்படைத்தல்.

6.5 பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் தன்னை அர்ப்பணிக்கும் பெற்றோர்களை தெரிவு செய்து கொடுத்தல்.

6.6 தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல்.

6.7 தொழில் செய்யும் வகையிலான ஏதேனும் ஒரு தொழிற்பயிற்சியைப்பெற்றுக்கொடுத்தல்.

6.8 திருமணம் செய்தல்.

6.9 திணைக்களத்தால் அனுமதியைப் பெற்று சிறுவர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளை வேறு சிறுவர் இல்லத்திற்கு மாற்றவோ அல்லது வேறு எந்த முறையிலாவது விடுதியிலிருந்து நீக்குவதற்கு முன்பாக சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரின் முன் அனுமதியினை பெற வேண்டும். சகல கீழ் குறிப்பிடப்பட்ட நபர் அடங்கிய பரிசீலனை குழுவினரின் கூட்டம் 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது நடாத்தி அதனூடாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய ஒவ்வொரு பிள்ளை தொடர்பாகவும் செயற்பட்டிருக்க வேண்டும்.

(1) பிரதேச நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை/இல்ல பொறுப்பான நிர்வாக அதிகாரி ;

(2) செயற்பாட்டு சபையின் முகாமையாளர்/பிரதிநிதி.

(3) இல்லப்பொறுப்பாளர்/ஆலோசரகர்.

விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளை 3 வருடங்களுக்கு மேலாக விடுதியில் தங்கவைக்க வேண்டும் என பரிசீலனை குழுவினால் தீர்மானிக்கப்பட்டால் அப்பிள்ளைகள் தொடர்பாக குறிப்பிட்ட 3 வருடங்கள் நிறைவுபெறும் கால எல்லைக்கு முன்பதான 3 மாதங்களுக்கு முன்பதாகவே சி. ப. ந. ஆணையாளரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறவில்லையெனில் குறிப்பிட்ட பிள்ளைக்கான பராமரிப்பு செலவினங்கள் கைக்கொள்ளப்பட மாட்டாது.

**பொதுவானவை :**

7. 1 அனைத்து இல்லங்களிலும் ஒவ்வொரு பிள்ளைகளினதும் சமயத்தை வழிபடுதற்கான பொறுத்தமான சூழலும் வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

7.2 குறிப்பிட்ட மாதங்களுக்கு ஒரு முறை பிள்ளைகளை சிறிய அல்லது பெரிய குழுக்களாக பிரித்து/வினோத கட்டளைகளை ஏற்பாடு செய்தல் பொறுத்தமானதாகும் (இச்செயற்பாடானது சமூக சேவைகள் பாடசாலையின் போதிக்கப்பட்ட பாடநெறிகளின் ஆலோசனைகளுக்கு அமைய செயல்படுத்துவது/ ஏற்பாடு செய்தல் பொறுத்தமானதாகும். இம்முறையின் கீழ் பிள்ளைப்பராமரிப்பு இல்லத்திற்கு அருகாமையிலான அல்லது தூர இடங்களில் உள்ள கல்வி அல்லது கலாசார சம்பந்தமான பெறுமதிமிக்க இடங்களை கண்டு களிப்பதற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லலாம்.

7.3 அனைத்து இல்லங்களிலும் சாரணர் குழுக்களை (ஆண்/பெண்) நடைமுறைப்படுத்தல் பொருத்தமானது.

7.4 பிள்ளைகளின் பெற்றோர்/பாதுகாவலர் உடன் தொடர்பாடல் அதிகாரிகள் வரையிலான செயற்பாடுகள் அல்லது வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

7.5 சிறுவர் இல்லத்தின் செயற்பாடுகளை அவ்வப்போது பரிசீலித்து பொறுத்தமான ஆலோசனைகளை வழங்குவதற்காக ஆலோசனை குழு ஒன்றினை அமைப்பதற்கான யாப்பிற்கு உட்பட அதிகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர்பராமரிப்பு விடயப் பொறுப்பான அமைச்சருக்கு உண்டு. அதற்காக சிறுவர் நன்னடத்தை சம்பந்தமான அறிவு கொண்ட சிறுவர் இல்லத்தின் செயற்பாடுகள் சம்பந்தமான அக்கறையுள்ள வெளியாளர் இருவர் அல்லது அதற்கு கூடுதலான அதிகாரிகளின் பெயர் விவரத்தினை கோட்ட மட்டத்திற்கு பொறுப்பான உதவி ஆணையாளர் மூலம் எமக்கு சமர்பித்து அனுமதியினை

7.6 சிறுவர் இல்லத்திற்கு கிடைக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நிதி மற்றும் பொருள் உதவிகள் அனைத்தும் வழமைபோன்று கணக்கிடப்பட்டு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டருத்தல் வேண்டும்.

7.7 தொண்டர் சிறுவர் இல்லங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்படவிருக்கும் அனைத்து செயற்பாடுகள் சம்பந்தமாகவும் எமது முன் அனுமதியினை பெற்றிருக்க வேண்டும் என்பதோடு தற்போது நடைமுறையில் உள்ள செயற்பாடுகள் சம்பந்தமாகவும் எமக்கு அறிவிக்க வேண்டும்.

7.8 விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளின் பொறுப்புகள்/கடமைகள் தொடர்பான சிந்தனை மேம்பாட்டினை அடைவதற்காகவும் ஒன்று சேர்ந்து வேலை செய்வதற்காகவும் சகல சிறுவர் இல்லங்களின் பிள்ளைகளையும் குழுக்களாக்கி செயற்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

7.9 சிறுவர் இல்லம் சீரான முறையில் செயற்படாது பிள்ளைகளுக்கு இடையூறாக நடாத்தி செல்லும் போது அது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திணைக்களத்திற்கு நேரிடும். அவ்வாறான திருப்திகரமற்ற நிலையின் போது அதை சீரான நிலைக்கு கொண்டு வருவதற்கு திணைக்களம் அறிவிக்கும் பட்சத்தில் அதனை நடைமுறைப்படுத்தாத பட்சத்தில் அச்சிறுவர் இல்லத்தினை மூடி பிள்ளைகளை வேறு சிறுவர் இல்லங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அநாதை இல்ல சட்டதிட்டங்களுக்கு நேரிடும்.

நன்நடத்தை மற்றும் சிறுவர்
பராமரிப்பு சேவை ஆணையாளர் (ஊவா).

தொழில் மத்திய நிலையம்,
எஸ். ஓ. எஸ். சிறுவர் கிராமம்.
த. பெ. இல. 1, குமாரவத்த,
மொணறாகலை.

**இணைப்பு - 2**

| தொழிற்சங்க பயிற்சி நிலையத்தின் பெயர் | முகவரி |
| --- | --- |
| எஸ். ஓ. எஸ். சிறுவர் கிராமம் | தபால் பெட்டி - 1, குமாரவத்தை, மொணராகலை. |

6-337/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.